தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 05 செப்டம்பர் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

சென்னையில் நான்கு அரசு மருத்துவமனைகளில்

அம்மா உணவகங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்...!!

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழு மகளிரின் ஊக்கமும் உழைப்பும் என்றும் மங்காது என்பதை நிரூபிக்கும் வகையிலும் இன்று வங்கித் தொடர்பாளர் என்ற பணியினை நீங்கள் மேற்கொண்டு வருவது உங்களின் சாதனைப் பயணத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் மாண்பு" என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. இந்த வார்த்தைக்கு இன்று இலக்கணமாக இருப்பவர்கள் சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் தான் என்று சொல்வது மிகையில்லை. இத்தகைய சிறப்பு பெற்ற உங்களை மாதந்தோறும் முற்றம் இதழ் வாயிலாக சந்திப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தரும் நிகழ்வாக இருக்கிறது.

பல்வேறு தடைகளையும் தகர்த்து சாதனைகளை படைத்து வரும் உங்களின் வெற்றிகளுக்கு ஊக்கமளித்து வருவது மகளிர் திட்டமும் புதுவாழ்வு திட்டமும்தான் என்பது அனைவருக்கும் தெரியும். தற்போது சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கும் மேலும் ஊக்கமளிக்க தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதும் நீங்கள் அறிந்ததுதான்.

இந்த இயக்கம் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமை அற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்று செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இதற்கு உங்களின் பங்களிப்பும் என்றும் தேவை.

சுய உதவிக் குழு மகளிர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர். அவர்கள் மேற்கொள்ளாத தொழில்களே இல்லை என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. தற்போது வங்கித் தொடர்பாளர்களாகவும் சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் உங்களின் பங்களிப்பை வழங்கி வருகிறீர்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

வங்கி என்பது மேல்தட்டு மக்களுக்கானது என்ற நிலையை மாற்றி, சாதாரண கிராம மக்களுக்கும் வங்கிச் சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், சுய உதவிக் குழு மகளிரின் ஊக்கமும் உழைப்பும் என்றும் மங்காது என்பதை நிரூபிக்கும் வகையிலும் இன்று வங்கித் தொடர்பாளர் என்ற பணியினை நீங்கள் மேற்கொண்டு வருவது உங்களின் சாதனைப் பயணத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

பெண்கள் நினைத்தால் எதையும் சாதிப்பார்கள் என்பது உங்கள் வெற்றியில் இருந்து அனைவரும் அறிந்து கொள்ள முடியும். எந்த திட்டத்தையும் சிறப்பாக செயல்படுத்த நீங்கள் ஒன்றுபடுவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உங்களின் வெற்றிப் பயணம் மேலும் மேலும் தொடர வேண்டும் என்றும், உங்களின் வாழ்வில் வறுமை இருள் அகன்று வளமை ஒளி நிறைய வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

(நேர்காணல்)

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன்
பாரதீய மகிளா வங்கியின் தலைவர்

வலிமை மிகுந்த சங்ககிரிக் கோட்டை	4
கண்களைக் காப்போம்	8
ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள்	13
சேமிப்பு + சிக்கனம் (நேர்காணல்)	16
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	22
உலக வங்கிக் குழுவினர் வருகை	30
குளக்கரை கெண்டை மீன் வளர்ப்பு	32

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

மாதந்தோறும் பல்வேறு செய்திகளை தாங்கி வரும் முற்றம் எங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளது. சுய உதவிக் குழு மகளிரின் சாதனைகளை வெளிப்படுத்தி வரும் முற்றம் மேலும் மேலும் சிறப்பாக வளர எங்கள் குழுவின் வாழ்த்துகள்.

விஜயா சந்திரசேகரன்,
மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு,
மேலூர், மதுரை மாவட்டம்

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வில் வறுமையை அகற்றி வளமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், வெற்றிக் கதைகளும் சிறப்பாக முற்ற்ம இதழ் வெளிப்படுத்தி வருகிறது.

மாதேஸ்வரி மனோகர்,
வெள்ளைப் புறா மகளிர் குழு,
கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

எங்களுக்கு பல்வேறு வகையிலும் உதவியாக பயனுள்ள செய்திகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் உண்மையிலே பெண்களின் தோழிதான். முற்றம் இதழினை படிக்கும் போது நாங்கள் பல செய்திகளை அறிந்து கொள்கிறோம்.

தாமரைச்செல்வி ராமமூர்த்தி,
செல்லியம்மன் மகளிர் குழு,
குன்னூர், நீலகிரி மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளையும், அதன் மூலம் வாழ்வாதார வளர்ச்சிப் பெற்றவர்களின் வெற்றிக் கதைகளையும், கடலோர மக்களுக்கு இத்திட்டம் அளித்து வரும் நல உதவிகளையும், மீனவ மக்களின் வாழ்விற்கு தீட்டி வரும் திட்டங்களும் முற்றம் இதழ் வாயிலாக சிறப்பாக வெளிப்படுகிறது.

சரஸ்வதி விஸ்வநாதன்,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 16 இதழ் 05 செப்டம்பர் 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்

ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்

கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்

மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

மாசற்ற இந்தியா...

இந்திய பிரதமர் அவர்கள், 'சுத்தமான இந்தியா' என்னும் ஒரு புதிய இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த இயக்கத்தின் நோக்கம் உலகில் உள்ள 50 சுத்தமான நாடுகளின் பட்டியலில் இந்திய நாட்டையும் இடம் பெற செய்வதாகும். இவ்வாறு செய்வதன் மூலம் உலகம் முழுவதிலிருந்தும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து இழுப்பதன் மூலம் இந்திய பொருளாதாரம் உயர்வடையும். அதோடு சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்பட்டு, சுகாதார கேடால் உருவாகும் பெரும்பாலான வியாதிகள் தடுக்கப்பட்டு, சுகாதார மான வாழ்விற்கும் வழிவகுக்கும். மேலும் சுற்றுசூழலும் பாதுகாக்கப்படும்.

இந்த சுகாதார இயக்கத்தின் மூலம் இயற்கை வளத்தைப் பாதுகாக்க தொடங்கினால் மேலும் சிறப்பாக இருக்கும். இந்த இயக்கம் வெற்றி பெற வேண்டுமானால் பல்முனை பிரச்சாரமும், மக்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகிறது. அதோடு கல்வி, சுற்றுச்சூழல், பொதுப்பணி, சுகாதாரம் ஆகிய துறைகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் ஆகியவைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் இதில் மகத்தான வெற்றியைப் பெற முடியும்.

இந்த இயக்கம், தேசத் தந்தை காந்தியடிகளின் பிறந்த நாளன்று தொடங்கப்படும் என்று பிரதமர் அறிவித்து இருப்பது வரவேற்கத் தக்க ஒன்று. இதற்குக் காரணம் வாழ்க்கையில் எளிமையும், மனதில் வலிமையும் கொண்டு நம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்று தரும் இயக்கத்திற்கு தலைமை ஏற்று வழி நடத்திய தேசப்பிதா காந்தியடிகளின் பிறந்த நாளில் இப்படிப்பட்ட ஒரு இயக்கம் ஆரம்பிப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

சுற்றுப்புற சுத்தத்தை பாதுகாப்பதோடு, மனிதர்களின் மனதை சுத்தப்படுத்துவதற்கு அகிம்சை, தீண்டாமை ஒழிப்பு, வாய்மை, சுய உதவி போன்ற கருவிகளைப் பயன்படுத்த காந்தியடிகள் அரும்பாடுபட்டவர்.

'வன்முறையால் எதையும் சாதிக்க முடியாது. மாறாக அமைதி வழியில் அனைத்தையும் வெல்ல முடியும்' என எடுத்துக் கூறியவர். அதை செயல்களிலும் காட்டியவர். அவரது இந்த போதனைகள் மனிதர்களின் மனது சுத்தமாக இருப்பதற்கான வழிகாட்டிகளாகும்.

மக்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்திய நரகாசுரனின் மரணத்தை மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுவதுதான் தீபாவளி பண்டிகை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இன்று நிலவி வரும் பெரும் துன்பங்களான வறுமை, அறியாமை, கல்லாமை, தீண்டாமை, சுயநலம் போன்றவைகள் அரக்கத்தனமாக மக்களை அழித்து வருவதை ஒழித்துக் கட்டி, அனைவரின் வாழ்விலும் ஆனந்த ஒளி ஏற்ற அனைவரும் பாடுபடுவோம். வாசகர்கள் அனைவருக்கும் 'முற்றம்' தன் இனிய தீபாவளி வாழ்த்துகளை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

முதியோர் நலன் காப்போம்...

அனைத்துலக முதியோர் நாள் – அக்டோபர் 1

உலகம் முழுவதிலும் உள்ள மூத்தக் குடிமக்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும், குடும்பம், சமூகம் மற்றும் தேசத்திற்கு அவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவு கூறும் வகையிலும், அவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் சாதனைகளைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவும், மக்களுக்கு எடுத்துரைக்கும் நாளாக சர்வதேச முதியோர் தினம் உலகம் முழுவதும் அக்டோபர் 1ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் முதியோர் நலனைக் காத்திடும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 65 வயதைக் கடந்த ஆதரவற்றோருக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்குதல், இலவச மதிய உணவுத் திட்டம், இலவச அரிசி வழங்கும் திட்டம், அரசு மருத்துவமனைகளில் முதியோர்களுக்கு தனி படுக்கை மற்றும் மருத்துவ வசதி ஏற்படுத்தி தர நிதி ஒதுக்கீடு போன்றவற்றை அரசு மேற்கொண்டுள்ளது. ■

உதிரம்கொடுப்போம்! உயிரைக் காப்போம்...

தேசிய இரத்த தான தினம் – அக்டோபர் 1

உயிர்களைக் காக்கத் தேவைப்படும் இரத்த தானத்தின் அவசியத்தையும், இரத்த தானம் செய்யும் ஆர்வத்தைத் தூண்டி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் தேசிய இரத்த தான தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இரத்தம் மனிதனின் வாழ்க்கையில் மிகவும் உயரிய பரிசாகும். இரத்தத்திற்கு மாற்றாக எதுவும் இல்லை. ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவின் மொத்த தேவை சுமார் 4 கோடி யூனிட் இரத்தமாகும். ஆனால் 40 லட்சம் யூனிட் இரத்தம் மட்டுமே கிடைக்கிறது.

இரத்த தானம் என்பது உயிரைக் காக்கும் ஒரு செயலாகும். இரத்த தானம் செய்வதன் மூலம் அறுவை கிச்சை செய்பவர்களுக்கும், விபத்தில் இரத்த சேதம் அடைந்தவர்களுக்கும் இரத்தம் அதிகம் தேவைப்படுகிறது.

எனவே இரத்த தானம் என்பது மிகவும் முக்கியத்துவம் கொண்டதாகும். இரத்த தானத்தால் தானம் செய்பவருக்கு எந்தவிதப் பின்விளைவும் ஏற்படாது. எந்த வகையிலும் உடல் நலம் பாதிக்கப்படாது, உடல் எடை குறையாது, வலிமை குன்றாது என்பதை அனைவருக்கும் எடுத்துக் கூறி, இரத்த தானம் செய்யும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

இரத்த தானம் குறித்து மக்களிடையே ஏற்படும் அச்சத்தைப் போக்கிட வேண்டும். இரத்த தானம் செய்வதால் ஒரு உயிரைக் காப்பாற்றிய ஆத்ம திருப்தி ஏற்படுகிறது. இரத்த வங்கிகள் நாடெங்கும் செயல்படுகின்றன. இரத்த தான முகாம்களும் நடைபெறுகின்றன.

தொண்டு நிறுவனங்களும் இரத்த தானம் குறித்த விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டு வருகின்றன. நாமும் இரத்த தானம் செய்ய முன்வருவோம். பிற உயிர்களையும் நம் உயிராகக் கொள்வோம்.■

வறுமையை ஒழித்திடுவோம்...

உலக வறுமை ஒழிப்பு நாள் – அக்டோபர் 17

ஆண்டுதோறும் அக்டோபர் 17ஆம் நாள் உலக வறுமை ஒழிப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது. உலகில் வறுமை நிலை காரண மாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு செயல் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நாள் 1987ஆம் ஆண்டு முதன் முதலாக பாரீஸ் நகரில் கடைபிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை, பயம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவருக்கு உதவும் நோக்குடன் சுமார் 1 இலட்சம் பேர் ஒன்று கூடி வறுமைக்கு எதிராக நடைபெறும் போராட்டத்திற்கு தங்களின் பங்களிப்பை செலுத்தினர். ■

சங்ககிரிக் கோட்டைதான் தமிழகத்திலேயே உயரமான மலைக் கோட்டையாகும்.

வலிமை மிகுந்த சங்ககிரிக் கோட்டை

சங்கு போன்ற தோற்றம் தரும் கோட்டையைப் பார்த்துள்ளீர்களா? தமிழகத்திலேயே உயரமான கோட்டை எங்குள்ளது தெரியுமா? ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய தீரன் சின்னமலையை தூக்கிலிட்ட கோட்டை எது தெரியுமா? இந்தக் கேள்விக்கெல்லாம் ஒரே பதில் சங்ககிரிக் கோட்டை என்பதுதான்.

தமிழகத்தின் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தில் சங்ககிரி துர்க்கம் என்ற மலையின் மீது அமைந்துள்ளதுதான் சங்ககிரி கோட்டையாகும். இந்தக் கோட்டை சங்கு போன்ற வடிவம் கொண்டதால் இதற்கு சங்ககிரி என்று பெயர் வந்தது என்று சொல்லப்படுகிறது.

வரலாற்று சிறப்பு மிகுந்த இந்தக் கோட்டை விஜயநகர அரசர்களால் 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறகின்றனர். இக்கோட்டையின் உயரம் 5 கி.மீ. சங்ககிரிக் கோட்டைதான் தமிழகத்திலேயே உயரமான மலைக்கோட்டையாகும்.

மலையின் அடிப்பகுதியில் இருந்து மலை உச்சி வரை இக்கோட்டையில் ஒன்பது நுழைவாயில்கள் உள்ளன. மலையிலுள்ள பாறைகளை மிகவும் அழகான முறையில் செதுக்கி இந்த வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டை யினைக் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்களும் மிகவும் உறுதியானவையாக உள்ளன. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் திப்பு சுல்தானால் இந்தக் கோட்டை பலப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

இக்கோட்டையில் உள்ள 9வது வாயிலில் 1799 என்ற ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளதால் ஆங்கிலேயரால் இந்த வாயில் அமைக்கப் பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சங்ககிரிக் கோட்டையின் மூன்றாவது வாயிலில் உள்ள வரதராசப் பெருமாள் கோவிலில் இன்றும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கோவிலின் ஒரு பகுதி இந்திய தொல்பொருள் துறையால் புனரமைக்கப்பட்டுள்ளது.

5வது வாயிலில் படை வீரர்கள் தங்குமிடம் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. 5 மற்றும் 6வது வாயில்களுக்கு இடையில் இஸ்லாமியர்களின் வழிபாடு தலமும், அதன் அருகில் சுரங்கப் பாதை ஒன்றும் உள்ளது. 6வது வாயிலில் வெடிமருந்து வைப்புக் கிடங்கும் அமைந்துள்ளது.

மலைக் கோட்டையின் உச்சியில் சென்னகேசவப் பெருமாள் கோவில் உள்ளது. முக்கிய விழா நாட்கள் தவிர பிற நாட்களில் இக்கோவிலின் உற்சவர் மலை அடிவாரத்தில் வைக்கப்படுகிறார். மலையடிவாரத்தில் சோமேஸ்வர சுவாமி கோவில் ஒன்றும் உள்ளது.

மதங்களின் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இக்கோட்டையில் சிவன் கோவில், வரதராசப் பெருமாள் கோவில், சென்ன கேசவப் பெருமாள் கோவில், தஸ்தகீர் மகான் தர்க்கா, செய்த் பீர் மசூதி ஆகியவை அமைந்துள்ளன. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய தீரன் சின்னமலை 1805ஆம் ஆண்டு இக்கோட்டையில்தான் தூக்கிலிடப்பட்டார். ■

> “இந்தக் கோட்டையில் ஆள் இறங்கும் குழி, தோல் உரிச்சான் மேடு, தொங்கவிட்டான் குகை, உரிட்டி விட்டான் பாறைன்னு பல பகுதிகள் இருக்கின்றன. தண்டனை பெற்றவர்களை தண்டிக்கும் இடமாக இவைகள் இருந்துள்ளன.”

கோமாதாவின் தொழுவம்

டாக்டர். பி. துரைராசன், கால்நடை மருத்துவர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சென்ற இதழில் தரமான சிறந்த கறவை மாடுகள் தேர்ந்தெடுப்பது குறித்து தெரிந்து கொண்டோம். கறவை மாடுகளை எவ்வாறு சுகாதாரமான முறையில் பராமரிக்க வேண்டும் என்பதை இந்த இதழில் பார்ப்போம்.

மாட்டுத்தொழுவம்சற்றுஉயரமானஇடத்தில்தெற்குவடக்காக இருக்குமாறு அமைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நல்ல காற்றும், சூரிய வெளிச்சமும் கிடைக்கும்.

மாட்டு தொழுவத்தின் தரை வழவழப்பின்றி கோடுகள் போடப்பட்ட சிமெண்டுடன் சொர சொரப்பாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாடுகள் வழுக்கி கீழே விழுவது தடுக்கப்படும்.

ஒரு மாட்டிற்கு சுமார் 4 அடி அகலமும் 8 அடி நீளமும் உள்ளவாறு கொட்டகை அமைப்பது நல்லது. தீவனத்திற்கும் தண்ணீருக்கும் தனித்தனியாக தொட்டி வைப்பது நல்லது. மாடுகளின் கழிவு நீர் தேங்கி நிற்காமல் இருப்பதற்காக தொழுவத்தின் தரையை சற்று சரிவாகவும், கழிவு நீர் செல்லும் வகையிலும் வாய்க்கால் அமைக்க வேண்டும்.

மேற்கூரையின் உயரம் குறைந்தது 9 அடியாகவும், அதிகபட்சம் 12 அடியாகவும் தூண்கள் கொண்டு தாங்கச் செய்வது நல்ல காற்றோட்டத்திற்கு உதவும்.

மேற்கூரை குறைந்தது 50 செ.மீ. வெளியே நீட்டிக் கொண்டிருப்பதாக அமைக்கப்பட்டால் மழை சாரல் உள்ளே வராமல் தடுக்க முடியும்.

தினசரி இருமுறை தொழுவத்தை சுத்தம் செய்ய வேண்டும். கன்றுகளை 1 மாதம் வரை தனித் தனியாகவும், பிறகு மந்தையாகவும் வளர்க்கலாம்.

கன்றுகள் சுற்றி உலாவி வரும் வகையில் வேலி போடப்பட்ட திறந்தவெளியுடன் கூடிய கூரை வேய்ந்த கொட்டகை அமைப்பது சிறந்தது. இவைகளை மேற்கொண்டால் கறவை மாடுகள் ஆரோக்கியத்துடன் திகழும்.

'கால்நடை நலம் – மனித வளத்திற்கு பலம்' ■



ஏழை எளிய மக்களின் வீடு தேடி வரும் வங்கிச் சேவைகள்...

சு. ஞானமுத்து
முதுநிலை மேலாளர், இந்தியன் வங்கி

நமது பாரத பிரதமரால் ஏழை மக்களுக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தரும் 'பாரத பிரதமரின் மக்கள் நிதித் திட்டம்' (பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா) நாடு முழுவதும் கடந்த 28.08.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டு (2015) ஜனவரி 26ஆம் தேதிக்குள் 7.5 கோடி குடும்பங்களுக்கு வங்கிக் கணக்கு தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கணக்குத் துவங்கும் அனைவருக்கும் வங்கி சேமிப்பு கணக்குடன் 'ரூபே' என்ற வங்கிப் பற்று அட்டை (டெபிட் கார்டு) ரூ. 30,000/–க்கான ஆயுள் காப்பீட்டு வசதி மற்றும் ரூ. 1 இலட்சத்திற்கான விபத்து காப்பீடு வசதியும் அளிக்கப்படுகிறது.

இந்த 'ரூபே' அட்டையைப் பயன்படுத்தி எந்த ஒரு ஏ.டி.எம்.மிலும் பணம் எடுக்கலாம். அரசின் மானிய உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு மானியத் தொகை இத்திட்டத்தின் வாயிலாக நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. இதுதவிர இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சுலபமாகப் பணம் அனுப்பும் வசதியும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டம் நாடு முழுவதும் பிரம்மாண்டமான முறையில் தொடங்கப்பட்டு இதுவரை 2 1/2

கோடி பேருக்கு வங்கிக் கணக்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இது வங்கி வரலாற்றில் ஒரு சாதனையாகும்.

ஆறு மாத காலத்திற்கு வங்கிக் கணக்கை முறையாகப் பயன்படுத்துபவர்களுக்கு ரூ. 5,000/– மிகைப்பற்று (ஓவர் டிராப்ட்) வசதியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள இந்தியன் வங்கி கிளைகளின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு, துவக்க நாளிலேயே 7.58 இலட்சம் பேருக்கு வங்கிக் கணக்குகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தி, முறையற்ற நிதி நிறுவனங்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க இத்திட்டம் வெகுவாக வழி வகுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.■

> “அரசின் மானிய உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு மானியத் தொகை இத்திட்டத்தின் வாயிலாக நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.”

மேலும் விபரங்களுக்கு இந்தியன் வங்கி,
கார்ப்பரேட் அலுவலகத்தை அணுகவும் / போன்: 2813 4036

(தொடரும்)

சென்னையில் நான்கு அரசு மருத்துவமனைகளில்

அம்மா உணவகங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்...!!

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஓட்டுனர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்கள் பயன் பெறும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் சுகாதாரமான மற்றும் தர மான உணவுகளை மலிவு விலையில் வழங்கும் அம்மா உணவகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2013ஆம் ஆண்டு பிப்ரவரி 19ந் தேதி தொடங்கி வைத்தார்.

> "எகிப்து நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகளும், குஜராத், டெல்லி, ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அம்மா உணவகங்களை நேரில் பார்வையிட்டு, அவை செயல்படும் விதம் குறித்து கேட்டறிந்து, சிறப்பாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினை பாராட்டியுள்ளனர்."

சென்னை மாநகராட்சியில் 203 அம்மா உணவகங்கள் ஏழை எளிய மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்று மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த உணவகங்களில் காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி மற்றும் பொங்கல், சாம்பார், மதியம் 12 மணி முதல் மாலை 3 மணி வரை சாம்பார் சாதம், தயிர் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம், மாலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை சப்பாத்தியுடன் பருப்பு கடைசல் ஆகியவை தரமானதாகவும் சுகாதாரமாகவும் தயார் செய்யப்பட்டு மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வந்து செல்லும் அரசு பொது மருத்துவமனை வளாகங்களில் அம்மா உணவகம் திறக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் முதல்கட்டமாக 20.11.2013 அன்று சென்னை பொது மருத்துவமனை வளாகத்திலும், இரண்டாம் கட்டமாக 21.02.2014 அன்று அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகங்களிலும் அம்மா உணவகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பொதுமக்களிடையே மாபெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள அம்மா உணவகங்கள் குறித்த செய்தி அறிந்து, இந்தத் திட்டத்தை தாங்களும் செயல்படுத்திட வேண்டும் என்ற நோக்கில் எகிப்து நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகளும், குஜராத், டெல்லி, ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அம்மா உணவகங்களை நேரில் பார்வையிட்டு, அவை செயல்படும் விதம் குறித்து கேட்டறிந்து, சிறப்பாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினை பாராட்டியுள்ளனர்.

இவ்வாறு ஏழை எளிய மக்களுக்கு மிகப்பெரும் பயனளிக்கும் இந்த சேவையை மேலும் விரிவுபடுத்தும் வகையில், திருவல்லிக்கேணியில் உள்ள அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை வளாகத்தில், மலிவு விலையில் தரமான உணவு வழங்கிடும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகத்தை 22.09.2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

மேலும், இந்த விழாவில் ராயப்பேட்டை அரசு மருத்துவ மனை வளாகம், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகம்,அரசுஆர்.எஸ்.ஆர்.எம்.மகப்பேறுமருத்துவமனை வளாகம் ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக திறக்கப்பட்ட அம்மா உணவகத்தில் உணவு வகைகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில், உணவினை சாப்பிட்டு, அவற்றின் சுவையை முதல் அமைச்சர் அவர்கள் சோதித்து பார்த்தார். அப்போது பணியில் ஈடுபட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுவினரிடம், இங்கு அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகத்தில் வெளிநோயாளிகளோடு உடனிருப்பவர்களும் உணவு வகைகளை உட்கொள்வதால் அவற்றை மிகுந்த கவனத்துடன் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தயாரித்து வழங்க வேண்டுமென்று ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர், பாராளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர், அரசு ஆலோசகர், பல்வேறு அரசுத் துறை செயலாளர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

“ ராயப்பேட்டை அரசு மருத்துவமனை வளாகம், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகம், அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை வளாகம் ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். ”

கண்களுக்கு மருந்திட்டு, சுகாதாரமாக வைத்துக் கொள்வதுடன், தினமும் இருவேளை குளிப்பது மிகவும் நல்லது.

கண்களைக் காப்போம்...!

நம் உடலின் மிக முக்கியமான உறுப்பு கண்கள் ஆகும். ஆனால் அதிகம் வெயிலில் அலைவது, இடைவிடாமல் தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் பார்ப்பது, சரியான உணவு முறையைப் பின்பற்றாமல் இருப்பது, கிருமித் தொற்று ஆகிய காரணங்களால் கண்களில் நோய்கள் ஏற்படுகின்றன. கண்கள் பாதிக்கப்படுவதால் கண்களில் எரிச்சல், கண்களில் கட்டி ஏற்படுதல், கண்கள் சிவந்து போதல், கண்களில் நீர் வடிதல் போன்ற கோளாறுகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக பல்வேறு அசௌகரியகங்களும் ஏற்படுகின்றன.

அதிகம் பேரை அவஸ்தைக்குள்ளாக்குவது 'மெட்ராஸ் ஐ' என்னும் கண்வலியாகும். இந்த நோய் தாக்கினால் கண்கள் சிவந்து விடும். ஒருவித வைரஸ் கிருமியால் ஏற்படும் இந்தக் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், அடிக்கடி சுத்தமான நீரில் கண்களைக் கழுவ வேண்டும். மருத்துவரின் ஆலோனையின்படி கண்களுக்கு மருந்திட்டு, சுகாதார மாக வைத்துக் கொள்வதுடன், தினமும், காலை மாலை என இருவேளைகள் குளிப்பது மிகவும் நல்லது.

கண்களில் நோய் வந்தவர்களுக்கு கண்ணில் அழுத்தம் ஏற்பட்டு, தலைவலி உண்டாகும். தலைவலி, பார்வைக் குறைவு ஏற்பட்டால் உடனே கண் மருத்துவரிடம் காண்பிக்கவும்.

இந்த சமயத்தில் கண்களை கசக்கினால் கண்களின் பாகங்களாகிய கருவிழி, வெண்ணிறமாகிய ஸ்கிலீரா, கண்ணில் உள்ள ஆடி, விழித்திரை போன்றவற்றில் பாதிப்பு ஆகியவை ஏற்படும். கண்வலி வந்தால் சரியான மருத்துவரை அணுகுவது அவசியம். வீட்டிலேயே வைத்தியம் பார்ப்பது பார்வை பறிபோகும் அபாயத்தை ஏற்படுத்தும்.

கண்களில் வலி வந்தால் சூரிய ஒளிக்கதிர்கள் கண்ணில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள், அதிகபட்சம ாக எந்த ஒளியையும் பார்க்கக் கூடாது. மருத்துவரின் ஆலோசனைப்படி கண்களுக்குப் பொருத்தமான கண்ணாடியைப் போட்டுக் கொள்ளுங்கள்.

கண்களில் கட்டி

கண் இமைகளில் அடிக்கடி தோன்றுவது கட்டிகள் ஆகும். இமைப்பகுதியில் உள்ள சுரப்பிகளில் ஏற்படும் அடைப்புகளின் காரணமாக உருவாகிற திரவங்கள் தேங்கி, கிருமிகள் தாக்கி கண்களில் கட்டி உருவாகி இப்பகுதியில் சீழ் பிடிக்கிறது. இதற்கு சிலர் சுயமாக வைத்தியம் செய்ய முயற்சிப்பது வழக்கம்.

கண்களைப் பொறுத்த வரை எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், மருத்துவரின் ஆலோசனைப்படி மட்டுமே சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கண்களில் கட்டி ஏற்பட்டால் களிம்பு, சொட்டு மருந்து, மாத்திரைகள் பயன்படுத்துவதன் மூலம் கட்டிக்கு தீர்வு காணலாம். வலி இருப்பின் வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம். சுடுநீரில் கர்சீப் அல்லது பஞ்சை நனைத்து உள்ளங்கைக்குப் பின்பகுதியில் வைத்துப் பார்க்க வேண்டும். கை பொறுக்கும் சூட்டில் இந்த ஒத்தடத்தை காலை மாலை இரண்டு வேளையும் 5 நிமிடத்துக்கு கண்களுக்கு தரலாம்.

சர்க்கரை அளவு பரிசோதனை

கண்கட்டி அடிக்கடி ஏற்பட்டால் ரத்தத்தில் சர்க்கரை அளவை சோதிக்க வேண்டியது அவசியம். நீரிழிவு அதிகமாகவும், நோய்

வயதானவர்கள் பிரச்சினை

வயதான பின்னர் கீழ் இமைகளில் உள்ள கொழுப்பு சத்து குறைந்து இமை உள்புறமாகவோ, வெளிப்புறமாகவோ திரும்பி விட வாய்ப்புள்ளது. வெளிப்புறமாகத் திரும்பினால் கண்ணில் இருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். இதனால் கண் உறுத்தல் ஏற்படும். இதற்கு மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும்.

கண் இமை வீக்கம்

கண் இமைகளில் வீக்கம் ஏற்படும் போது, கண்களை மூடுவதில் சிரமம் ஏற்படும். கண்கட்டி, பூச்சிக்கடி, எறும்புக்கடி, கண் நீர்ப்பைக்கட்டி போன்ற காரணங்கள் மற்றும் சளி, சைனஸ் போன்ற உடல் நோய்கள், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள், உடலில் ஏற்படும் ஒவ்வாமையின் காரணமாகவும், கண் இமைகளில் வீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் வலி, கண் மை மற்றும் சொட்டு மருந்து போன்றவற்றால் ஏற்படும் ஒவ்வாமை ஆகியவற்றாலும் இமைகளில் வீக்கம் ஏற்படும்.

கிருமித் தொற்று

கண் இமை ஓரங்களில் அரிப்பு ஏற்படுதல், இமை முடிகள் கொட்டிப் போதல், இமை ஓரங்கள் தடித்து வீங்குதல் போன்ற பிரச்சனைகள் கிருமித் தொற்றால் ஏற்படும். இமை முடிகளில் தலையில் உள்ள பொடுகு போல் ஒட்டிக் கொண்டு அரிப்பை ஏற்படுத்தும். இதுபோன்ற பிரச்சனை உள்ளவர்கள் தினமும் இரண்டு வேளை காலையில் குளிப்பதற்கு முன்பாகவும், இரவு தங்குவதற்கு முன்பாகவும் இமைகளை சுத்தம் செய்ய வேண்டும். மருத்துவர் ஆலோசனைப்படி மருந்து பயன்படுத்தி இதுபோன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம்.

எதிர்ப்புசக்திகுறைவாகவும்இருப்பவர்களுக்குகண்களில் தோன்றும் கட்டி முகத்திலும் பரவ வாய்ப்புள்ளது. இதன் அடுத்தகட்டமாக உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

கண்ணின் உட்புறத்தில் நாள்பட்ட கட்டி ஏற்படுதல் மற்றும் அடிக்கடி கட்டி வருதல் போன்ற பிரச்சனைகள் இருப்பின் கட்டியை பயாப்ஸி சோதனை செய்து காரணத்தைக் கண்டறிய வேண்டும். சில சமயங்களில் அது புற்றுநோய்க் கட்டியாக இருக்கவும் வாய்ப்புள்ளது. எனவே கண் தொடர்பாக எந்தப் பிரச்சனை ஏற்பட்டாலும் உடன் சுய வைத்தியம் மேற்கொள்ளாமல் மருத்தவரை அணுகி தக்க மருத்துவ சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டும். ■

> “சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள், உடலில் ஏற்படும் ஒவ்வாமையின் காரணமாகவும், கண் இமைகளில் வீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் வலி, கண் மை மற்றும் சொட்டு மருந்து போன்றவற்றால் ஏற்படும் ஒவ்வாமை ஆகியவற்றாலும் இமைகளில் வீக்கம் ஏற்படும்”

மாநில வங்கியாளர்கள் சிறப்புக் கூட்டம்

ஏழை மக்களுக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து தரும் 'பாரத பிரதமரின் மக்கள் நிதித் திட்டம்' (பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா) குறித்து சிறப்பு வங்கியாளர் கூட்டம், சென்னை சவேரா ஹோட்டலில் 12.09.2014 அன்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மைஇயக்குநர்திருமதிமைதிலிக.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் இணைச்செயலாளர் திரு. அலோக் தாண்டன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், SLBC கன்வீனர், ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலர் மற்றும் பல்வேறு வங்கிகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். வங்கிக் கணக்கு துவங்குதல், சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குதல் போன்ற பல்வேறு விபரங்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. ■

வல்லாரை கீரை

இந்தக் கீரையில் இரும்புச் சத்தும், ஏ மற்றும் சி வைட்டமின்களும், தாது உப்பு சத்தும், மூளையை நன்கு செயல்பட வைக்கும் ஊட்டச்சத்துக்களும் நிறைய உள்ளன. புண்கள், காய்ச்சல், தொண்டைகட்டு, உடல் சோர்வு போன்றவைகளை நீக்கும் இக்கீரை இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மையையும் கொண்டது. நினைவாற்றலை அதிகரிப்பதால் இந்தக் கீரைக்கு சரசுவதிக் கீரை என்ற பெயரும் உண்டு. குழந்தைகளுக்கு அடிக்கடி இந்தக் கீரையை சாப்பிடக் கொடுக்கலாம். இந்தக் கீரையின் பயன்கள் முழுவதையும் பெற இக்கீரையை சாப்பிடும் காலங்களில் மாமிசம், பாகற்காய், அகத்திக் கீரை போன்றவற்றை சாப்பிடக் கூடாது. புளி மற்றும் காரத்தை குறைவாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பூசணிக்காய்

காய்கறி வகைகளில் ஒன்றான பூசணிக்காயை சமைத்துச் சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப் புண், மேகவெட்டை போன்ற நோய்களின் தீவிரம் குறையும். உடல் சூடு தணிவதுடன், சிறுநீரக வியாதிகளும் நீங்கும். இந்தக் காயை அடிக்கடி சாப்பிட்டால் உடல் வலி தீரும். மேலும் ரத்த கசிவு, வலிப்பு நோய், குடலில் உள்ள நாடாப்புழுக்கள் போன்ற உபாதைகள் தீருவதுடன், இரத்தமும் சுத்திகரிக்கப்படும்.

சிறுகதை

யார் புத்திசாலி?

ஒரு கிராமத்தில் ஒரு அறிஞர் வசித்து வந்தார். அவர் ஒரு பொருளாதார மேதையாக இருந்ததினால் பல நாட்டு மன்னர்களும் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவரின் ஆலோசனையைக் கேட்க வருவார்கள். அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை அந்தப் பொருளாதார மேதை வழங்கி வந்தார்.

ஒருநாள் ஊர்த் தலைவர் வந்து, அவரைப் பார்த்து கிண்டலாக 'அய்யா! அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால் உங்கள் மகன் ஒரு அடிமுட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறானே!' என்று சொன்னார்.

இதைக் கேட்ட அறிஞர் மிக வருத்தமடைந்தார். தன்னுடைய மகனை அழைத்தார். 'தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்புடையது எது?' என்று கேட்டார். உடனே மகன் 'தங்கம்' என்று சொன்னான்.

இதைக் கேட்ட அறிஞர் தன் மகனைப் பார்த்து 'பின் ஏன் ஊர்த்தலைவர் கேட்கும் போது வெள்ளி என்று சொன்னாய்?' என்று கேட்டார். அதற்கு பையன் 'நாள் தினமும் பள்ளிக்குச் செல்லும் போது, ஊர்த் தலைவர் ஒரு கையில் தங்க நாணயமும், மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக் கொண்டு, 'அறிஞரின் மகனே இவை இரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக் கொள்!' என்று சொல்வார். நான் உடனே வெள்ளி நாணயத்தை எடுத்துக் கொள்வேன். இதைக் கண்ட ஊர்த்தலைவரும் அவரைச் சுற்றி இருப்பவர்களும் என்னைப் பார்த்து சிரித்து கிண்டல் செய்வார்கள், இந்த நிகழ்ச்சி தினம் நடக்கிறது' என்று கூறினான்.

உடனே அறிஞர் தன் மகனைப் பார்த்து 'வெள்ளியை விட தங்கம் தானே மதிப்பு வாய்ந்தது, நீ ஏன் வெள்ளி நாணயத்தை எடுக்கிறாய்' என்று கேட்டார். அதற்கு பதில் சொல்லாமல் மகன் வீட்டினுள் சென்று ஒரு பெட்டியை எடுத்து வந்து தந்தை முன் திறந்து காட்டினான். அப்பெட்டி நிறைய வெள்ளி நாணயங்கள் இருந்தன. அதைப் பார்த்து அறிஞர் திகைத்து நின்றார்.

> 'தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்புடையது எது?' என்று அறிஞர் தன் மகனிடம் கேட்டார். உடனே மகன் 'தங்கம்' என்று சொன்னான்.

உடனே மகன் 'அப்பா! வெள்ளியை விட தங்கம் மதிப்பு வாய்ந்து என்பது எனக்குத் தெரியும். ஊர்த் தலைவர் தங்க நாணயத்தையும் வெள்ளி நாணயத்தையும் காட்டி இரண்டில் மதிப்பு வாய்ந்ததை எடுத்துக் கொள் என்று சொன்னவுடன், நான் தங்க நாணயத்தை எடுத்திருந்தால் அவர் அடுத்த நாள் என்னிடம் எதையும் கேட்க மாட்டார். அந்த நிகழ்ச்சி அன்றுடன் முடிந்திருக்கும். எனக்கும் ஒரு தங்க நாணயம்தான் கிடைத்திருக்கும். ஆனால் நான் வெள்ளி நாணயத்தை எடுத்ததால் என்னை முட்டாள் என்று நினத்துக் கொண்டார். அதனால் தினமும் என்னிடம் இரண்டு நாணயங்கள் காட்டி மதிப்பு வாய்ந்ததை எடுத்துக் கொள் என்று சொன்னார். நானும் தினமும் வெள்ளி நாணயத்தை எடுத்து வந்தேன். இன்று ஒரு பெட்டி நிறைய வெள்ளி நாணயம் கிடைத்துள்ளது. இனியும் நான் அவ்வாறே செய்வேன்' என்று சொன்னான். மகளின் புத்திசாலித்தனத்தை நினைத்து மகிழ்ந்த அறிஞர் அவனை அன்புடன் அணைத்துக் கொண்டார். ■

– ஹேமலதா, இ.ஆர், நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சிறப்பு பார்வை வளமாக்கும் வங்கி சேவைகள்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கிராமப்புற வியாபார சரக்கு கிடங்கு (Rural Godown) (கட்டுதல், பராமரித்தல், உபயோகித்தல்)

தகுதியானவர்கள்

தனி நபர்கள், விவசாய மன்றங்கள், சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பொது / கூட்டு நிறுவனங்கள்.

அமைவிடம்

கிராமப்புற சேமிப்பு கிடங்கு கட்டுபவர், நகர எல்லைக்கு வெளியில், அவரவர் வணிகம் சார்ந்த திறனாய்வின்படி இலாபம் ஈட்டக்கூடிய இடத்தில் எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளலாம். மத்திய உணவு துறையின் மூலம் உருவாக்கப்பட்ட உணவு பூங்காவில் *(Food Parks)* கூட இந்தக் கிடங்குகளைக் கட்டலாம்.

அளவு

கிராமப்புற கிடங்கின் கொள்ளளவை *(Size / Capacity)* தொழில் முனைவோர்தான் முடிவு செய்ய வேண்டும்.

அரசின் மானியம், 100 டன் முதல் 10,000 டன் வரை கொள்ளளவு உள்ள கிடங்குகளுக்குத் தான் கிடைக்கும்.

மலை சார்ந்த பகுதிகளில் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டருக்கு மேல் உயரத்தில் 25 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்ட மானியம் உண்டு.

பிராந்திய / மாநிலத்தின் சிறப்பு தேவைகளுக்காகப் பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் கட்டப்படும் 50 டன் வரையிலான சிறிய, கிராமப்புற கிடங்குகள் கட்ட மானியம் உண்டு.

மானியம்

மலை சார்ந்த பகுதிகள், விவசாய மகளிர், விவசாய மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள், தாழ்த்தப்பட்ட / மலைஜாதி *(SC-ST)* தொழில் முனைவோர், அவர்களது சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு மொத்தக் கட்டுமானத் திட்டத்தின் தொகையில் 33.33 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூபாய் 62.50 இலட்சங்கள் வரை வழங்கப்படும்.

விவசாயப் பட்டதாரிகள் மற்றும் தனிநபர் விவசாயிகளுக்கு (மகளிர் விவசாயிகள் நீங்கலாக) 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூபாய் 46.87 இலட்சங்கள் வரை மானியம் வழங்கப்படும். மேற்கூறியவர்கள் நீங்கலாக உள்ள தனி நபர் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூபாய் 28.72 இலட்சங்கள் வரை மானியம் வழங்கப்படும். (மானிய விகிதம் மற்றும் அதிகப்படியான தொகை மாற்றத் திற்குரியது).

நபார்டு மூலம் மானியம் பெற மற்றும் வங்கிக் கடன் அளவு பற்றி விவரங்கள்

நிதி ஆதாரம்	விவசாயிகள், விவசாய பட்டதாரிகள், கூட்டுறவு அமைப்புகள்	தனி நபர், வணிக நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள்	மலை சார்ந்த இடங்கள், விவசாய மகளிர், SC-ST தொழில் முனைவோர் மற்றும் SC-ST சுய உதவிக் குழுக்கள்
உரிமையாளர் பங்கு (இடத்தினுடைய மதிப்பு, மொத்த திட்ட மதிப்பில் 10 விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும்)	25%	25%	20%
அரசு மானியம்	25%	15%	33.33%
குறைந்தபட்ச நீண்ட காலக் கடன்	50%	50%	46.67%

(தொடரும்)

குழந்தைகளின் உடல் நலத்தைக் காக்க அவர்களுக்கு வழங்கப்படும் உணவு ஊட்டச் சத்துக்கள் நிரம்பியதாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் நலத்தைக் காக்கும் உணவுகள்...!

குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் கிடைக்கும் வகையில் நல்ல சத்துள்ள உணவுகளைக் கொடுத்து வளர்க்க வேண்டும். உணவில் பொதுவாக புரதம், கொழுப்பு, மாவுப் பொருள், வைட்டமின்கள், தாது உப்புகள் என்னும் ஐந்து வகையான முக்கிய உணவுச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

உடலின் வளர்ச்சிக்கு மற்றும் ஆரோக்கியத்திற்குத் தேவையான புரதம் மற்றும் கொழுப்புச் சத்துக்கள், பால், முட்டை, இறைச்சி வகைகள், பருப்பு வகைகள், பட்டாணி, நெய், வெண்ணெய், சமையல் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களில் அதிகமாக உள்ளது. எனவே குழந்தையின் உணவில் மேற்கண்டவைகள் இருக்கு மாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வயதுக்கு மேற் பட்ட குழந்தைகளுக்கு உணவில் நெய், வெண்ணெய் போன்றவற்றை அளவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அரிசி, கிழங்குகள், தானியங்கள் ஆகியவற்றில் மாவுப் பொருட்கள் அதிகமாக உள்ளன. உடலுக்குத் தேவையான ஆற்றலை வழங்குபவை இந்த மாவுப் பொருட்கள். எனவே அரிசிச் சோறு, கோதுமை மற்றும் வேறு தானியங்களில் செய்த பண்டங்கள், உருளைக் கிழங்கு போன்றவற்றை குழந்தையின் உணவில் சிறிதளவு சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக சிறு குழந்தைகளின் உணவில் மாவுப் பொருள், கொழுப்பு ஆகியவற்றை விட புரதச் சத்து நிறைந்த உணவுப் பொருட்களை அதிகமாக சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. அதேசமயம் மாவுப் பொருட்கள், கொழுப்பு ஆகியனவும் குழந்தைகளுக்குப் போதுமான அளவில் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, செம்பு போன்ற தாதுப் பொருட்களும் குழந்தையின் ஆரோக்கியமானவளர்ச்சிக்குதேவைப்படுகின்றன. பல் மற்றும் எலும்புகளின் வளர்ச்சிக்கு கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்தும், இரத்த விருத்திக்கு இரும்பு மற்றும் செம்புச் சத்தும் தேவைப்படுகிறது.

பால், அவரைக்காய் போன்ற பொருட்களில் கால்சியமும், உப்பு, பால், கோழி இறைச்சி ஆகியவற்றில் பாஸ்பரஸும், கீரை, அவரைக்காய், பட்டாணி போன்றவற்றில் இரும்புச் சத்தும் அதிக அளவில் இருக்கின்றன.

மீன் எண்ணெய், பழரசம், பருப்புகள், நெய், கீரைகள், காய்கறிகள், அரிசி, கோதுமை, கேழ்வரகு ஆகியவற்றில் தயாரிக்கப்பட்ட உணவுகளை சிறு குழந்தைகளுக்கு தினமும் கொடுக்கலாம். குழந்தைகளின் ஆரோக்கியத் திற்கும், வளர்ச்சிக்கும் மேலே குறிப்பிட்ட உணவுச் சத்துக்கள் தவிர ஏ, பி, சி, டி, இ மற்றும் கே என்னும் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச்சத்துக்களும் தேவைப்படுகின்றன.

தோல், தொண்டை, மூச்சுக்குழல், கண் போன்ற உறுப்புகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வைட்டமின் ஏ உதவுகின்றது. இந்த வைட்டமின் பற்றாக்குறையினால் சளித் தொல்லையும், மாலைக்கண் நோயும் ஏற்படும். கொழுப்பில் கரையக்கூடிய இந்த வைட்டமின் பால்,

> “மாவுச்சத்து, கொழுப்பு ஆகியவற்றை விட புரதச் சத்து நிறைந்த உணவுப் பொருடகளை அதிகமாக சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. அதேசமயம் மாவுப் பொருடகள், கொழுப்பு ஆகியனவும் குழந்தைகளுக்குப் போதுமான அளவில் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.”

தயிர், வெண்ணெய், மீன் எண்ணெய், கீரை, பழங்கள், கேரட் போன்றவற்றில் அதிகமாக உள்ளது. எனவே, குழந்தையின் உணவில் இவற்றை அதிக மாக சேர்த்துக் கொள்ள வேண்டும். அதோடு 10 வயது வரையிலும் குழந்தைகளுக்கு தினமும் இரண்டு தேக்கரண்டி மீன் எண்ணெய் கொடுப்பது நல்லது.

வைட்டமின் பி என்பது 12 வைட்டமின்கள் சேர்ந்த ஒரு குழு. பி வைட்டமின்களின் ஒன்றான தையமின் பற்றாக்குறையினால் 'பெரிபெரி' என்னும் நோய் ஏற்படும். கால்களில் குடைச்சல், சோர்வு, இதய பலவீனம் போன்றவை பெரிபெரி நோயின் அறிகுறிகளாகும்.

பழங்கள், ஈஸ்ட், முளை கட்டிய கொண்டைக்கடலை, பயறு, உளுந்து, அரிசி தவிடு, பச்சைக் காய்கறிகள், முட்டை, கல்லீரல் போன்றவற்றில் வைட்டமின் பி அதிகமாக உள்ளது. மற்றொரு பி வைட்டமின்னான நிக்கோடினிக் அமிலம் பால், முட்டை, ஆட்டுக் கல்லீரல் ஆகியவற்றில் அதிகமாக இருக்கிறது.

பல், ஈறு, இரத்தக் குழாய்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க வைட்டமின் 'சி' தேவைப்படுகிறது. ஆரஞ்சு, திராட்சை, தக்காளி, காலிஃபிளவர், பட்டாணி,

> "குழந்தைகளுக்கு சத்தான உணவுகளைக் கொடுப்பது அவசியம். ஏனெனில் இளம் பருவத்தில் அவர்கள் சாப்பிடும் உணவுகளில் இருந்து கிடைக்கும் சத்துக்கள் தான் அவர்களை வலுவுள்ளவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் எதிர்காலத்தில் உருவாக்கும்."

நெல்லிக்காய் போன்றவற்றில் இந்த வைட்டமின் அதிக மாக உள்ளது. பால், வெண்ணெய், முட்டை, மீன் எண்ணெய் போன்றவற்றில் அதிகம் இருக்கும் வைட்டமின் டி, ரிக்கெட்ஸ் என்னும் நோய் வராமல் தடுக்கிறது. குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய இரத்தக் கசிவு நோய்களைத் தடுக்கும் வைட்டமின் 'கே' மீன் எண்ணெயில் அதிகமாக உள்ளது.

குழந்தைகளுக்கு சத்தான உணவுகளைக் கொடுப்பது அவசியம். ஏனெனில் இளம் பருவத்தில் அவர்கள் சாப்பிடும் உணவுகளில் இருந்து கிடைக்கும் சத்துக்கள் தான் அவர்களை வலுவுள்ளவர்களாகவும், உடல் ஆரோக்கியம் கொண்டவர்களாகவும் எதிர்காலத்தில் உருவாக்கும். ■

துரித உணவுகள் துரிதமாக கேடு விளைவிக்குமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பயன்படுத்த தயார் நிலை உணவுகள் (Ready to Use Foods)

(சமைக்க வறுக்க, மாற்றியமைக்கப்பட்ட வகை தயார் நிலை உணவுகள்) சமைக்கத் தயார் நிலை உணவுகளோடு சிறிது நீர் சேர்த்து சாப்பிடுமுன் சமைத்தல் (உ–ம்) மேக்ரோனி, ஸ்பகெட்டி, சேமியா, நூடுல்ஸ், அல்வா மிக்ஸ், ரெடி உப்புமா மிக்ஸ், ரெடி கிச்சடி மிக்ஸ், ரெடிபுலாவ் மிக்ஸ், ரெடி இட்லி மிக்ஸ் போன்றவை)

உடனடி உணவு வாங்கும் போது மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்த விபரங்கள்

லேபிளை நன்கு படியுங்கள்;

ஊட்டச்சத்து அளவுகளை புரிந்து கொள்ளுங்கள்;

உள்ளீட்டு பொருட்கள் / எடை / விலை / நாள் ஒப்பிட்டுப் பாருங்கள்;

குறைந்த விலை / அதிக ஊட்டச்சத்து பொருட்களை தேர்வு செய்யுங்கள்;

தேவையான ஒன்றை வாங்குங்கள்;

புதிய பொருட்களை மட்டும் பயன்படுத்துங்கள்;

சூடுபடுத்திய உடனே உண்ணுங்கள்;

பேக்டீரியா பெருக்கத்தை தடுத்திடுங்கள்;

கெட்டுப் போனதை ஒதுக்குங்கள்;

கெட்டுப்போன பொருள் பற்றி புகார் செய்யுங்கள் ;

தயாரிப்பாளர் / அரசு அலுவலர்களை அணுகுங்கள்.

உடல் நலம் பேணும் சில குறிப்புகள்

ஒரு உணவில் உள்ள இரசாயனத்தை எவ்வாறு உங்கள் உடல் ஏற்றுக் கொள்கிறது?

உணவில் சேர்க்கும் கூட்டுப் பொருட்கள் உங்களுக்கு எந்த அளவு தீங்கிழைக்கிறது?

எவ்வாறு அவை உங்கள் நலத்தைக் கெடுக்கின்றன?

உங்கள் 'ஜீன்' எந்த அளவுக்கு உதவி செய்கிறது?

உங்களது 'ஆண்டி ஆக்ஸிடெண்ட்' எவ்வாறு உங்களுக்கு பாதுகாப்பாக உள்ளது?

தேவையில்லாத பொருளை உங்கள் உடல் எவ்வாறு வெளியேற்றுகிறது?

என்பதைப் பொறுத்து உணவு வகைகள் உடலுக்கு உரம் சேர்க்கும்.

வீட்டில் செய்த உணவையே உண்ணுங்கள்!

பழம் மற்றும் காய்கறிகளை அதிக அளவில் உண்ணுங்கள்!!

நன்றி – நுகர்வோர் மஞ்சரி / ஜுலை 2014

மகளிர்சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு மகளிரின் மேம்பாட்டிற்காக அரசு தீட்டும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மகளிரை ஒன்றிணைத்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கி, வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதுடன் சுய தொழில் மேற்கொள்ள ஏதுவாக வங்கிக் கடனும் பெற்றுத் தரப்படுகிறது.

மகளிர்சுயஉதவிக்குழுக்கள்உற்பத்திசெய்யும்பொருட்களுக்குசந்தைவாய்ப்புகளைஉருவாக்கி, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடச் செய்யும் வண்ணம், கிராம அங்காடிகள், காலேஜ் பஜார் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அதன் ஒருபகுதியாக, சென்னை நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

மகளிர் மேளா – 2014 நவராத்திரி விற்பனைக் கண்காட்சி 12.09.2014 முதல் 05.10.2014 வரை நடைபெறுகிறது.

இக்கண்காட்சியினை 12.09.2014 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் முனைவர் ம. மனோகரசிங் அவர்கள், திரு. எல். ராஜா அவர்கள் மற்றும் பொது மேலாளர் திருமதி டபிள்யூ. சிராஜுன்னிஸா ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

12.09.2014 முதல் 05.10.2014 வரை காலை 10.30 மணிக்கு தொடங்கி, இரவு 8.30 மணி வரை நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் நவராத்திரி கொலு பொம்மைகள், தரமும் உறுதியும் நிறைந்த வீட்டு உபயோகப் பொருட்கள், வண்ண வண்ண பருத்தி, பட்டு மற்றும் செயற்கை இழை புடவைகள், மங்கையர் மனம் மயக்கும் செயற்கை ஆபரணங்கள், காகிதம், சணல், களிமண், பீங்கான் ஆகியவற்றினால் உருவான பலவகையான பொம்மைகள், தெய்வீக அழகு மிளிரும் மரச் சிற்பங்கள், மரப் பொருட்கள், பனை ஓலை மற்றும் பாக்கு மட்டையில் தயாரிக்கப்பட்ட பொருட்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நவநாகரீக ஆயத்த ஆடைகள், புளி, தேன், ராகி, சாமை, ரோஜா குல்கந்து மற்றும் உடலுக்கு நன்மை தரும் மூலிகைப் பொருட்கள், நீலகிரி தைலம், தரமான ஊட்டி தேயிலை மற்றும் காபித்தூள், சுவையும் சத்தும் மிகுந்த பாரம்பரிய உணவுகள், கிராமிய சுவை நிறைந்த ருசியான தின்பண்டங்கள், தேங்காய் நார், சணல், துணி, வாழை நார் ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட வண்ண மிதி யடிகள், தரமான தோலினால் தயாரிக்கப்பட்ட பர்ஸ்கள், பைகள், கலைநயம் மிகுந்த சணல் கைப்பைகள், மூங்கில் பொருட்கள் போன்றவை விற்பனைச் செய்யப்படுகின்றன.

சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், அழகாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் ஏராளமான மக்கள் நவராத்திரி கண்காட்சிக்கு வருகை தந்து, தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்தம் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தி தரும் வகையிலும் நடைபெறும் மகளிர் மேளா நவராத்திரி விற்பனைக் கண்காட்சிக்கு பொதுமக்கள் வருகை தந்து, சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் தரமான பொருட்களை வாங்கி, சுய உதவிக் குழு மகளிரின் தன்னம்பிக்கைக்கு ஊக்கமளித்து, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்திட வேண்டும். ■

> “சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், அழகாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் ஏராளமானவர்கள் மகளிர் மேளா நவராத்திரி கண்காட்சிக்கு வருகை தந்து, தங்களுக்குத் தேவையானப் பொருட்களை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.”

சேமிப்பு+சிக்கனம்

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன்
பாரதீய மகிளா வங்கியின் தலைவர்

நமது முற்றம் பல்வேறு காலக்கட்டங்களில் பல்துறைகளில் சாதனைகளைப் படைத்த மகளிரின் நேர்காணல் வாயிலாக உங்களை சந்தித்து வருவது நீங்கள் அறிந்ததே. அவ்வகையில் இம்முறை வங்கித் தொடர்பாளர்களாக பணியாற்றி வரும் சுய உதவிக் குழு மகளிரே, பெண்களுக்கு என தனியாகத் துவக்கப்பட்டுள்ள பாரதீய மகிளா வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்களை நேரடியாக சந்தித்து நேர்காணல் செய்தனர். இச்சிறப்புமிக்க நேர்காணலை வாசகர்களுக்கு வழங்குவதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் பெருமை அடைகிறது.

20.09.2014 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் தேர்வு செய்யப்பட்ட வங்கித் தொடர்பாளர்களான திருமதி. சுமதி, திருமதி. மகேஸ்வரி, திருமதி. உமாதேவி மற்றும் திருமதி. பாலாமணி ஆகியோர் புதுதில்லியில் பாரதீய மகிளா வங்கியின் தலைமையகத்தில் வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்து நேர்காணல் செய்தனர்.

பல்வேறு பயிற்சிகள் பெற்று சுய தொழில்கள் மேற்கொண்டு சிறந்த தொழில் முனைவோர்களாக செயல்பட்டு வரும் சுய உதவிக் குழு மகளிர் இன்று வங்கித் துறையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். வங்கித் தொடர்பாளர்கள் என்ற பணியினை மிகவும் சிறப்பாக செய்து வரும் சுய உதவிக் குழு மகளிர், வங்கிக் கிளைகள் இல்லாத குக்கிராமங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்குக் கூட வங்கிச் சேவைகள் சென்றடையச் செய்வதில் மிகவும் முனைப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

வங்கித் தொடர்பாளர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற மகிளா வங்கியின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள், பரஸ்பர வரவேற்பிற்குப் பின்னர். வங்கித் தொடர்பாளர்களைப் பார்த்து, 'மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள நீங்கள் வங்கித் தொடர்பாளர்களாகவும் பணியாற்றி வருகிறீர்கள். இது உங்களுக்கு ஏற்றதாக உள்ளதா? சுய உதவிக் குழுவில் உங்கள் பணிக்கு தடையாக இல்லையா? என்ற கேள்வியை முன் வைத்தார்கள்.

இதற்கு வங்கித் தொடர்பாளரான சுமதி கூறும்போது, 'எங்கள் குழுவில் கால்நடைகளை வளர்த்து, பால் உற்பத்தி செய்து வருகிறோம். நான் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்தாலும், வங்கித் தொடர்பாளராக பணியாற்றுவதற்கு எனக்கு நேரம் கிடைக்கிறது. இதுமட்டுமில்லாமல் குழுக்களுக்கு வங்கியில் நேரடிக் கடன் பெற்றுத் தருவதற்கு இந்தப் பணி உதவியாக இருக்கிறது' என்றார்.

சுமதி: தமிழ்நாட்டில் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைந்திருக்கிறோம். அதைப்பற்றி...

என்னன்னா... மகளிர் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற வேண்டுமென்றால் நிச்சயமாக கல்வி இருந்தால் தான் முன்னேற முடியும். எவ்வளவு திறமை இருந்தாலும் பெண்களுக்கு கல் வித் தகுதி இருந்தால்தான், அவர்கள் தனித்தன்மை மிக்கவர்களாக இருக்க முடியும். பெண்கள் இயற்கையிலேயே நல்ல புத்திசாலிகள், திறன்

> "தமிழ்நாடு அரசு மகளிருக்கு ஈடுபாட்டுடன் கல்வியைக் கொடுப்பதால் பெண்களின் மேம்பாட்டிற்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. வங்கித் தொடர்பாளர்களில் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் கூட இருக்கிறார்கள் என்கிற போது அவர்களுக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது, நாம் என்ன செய்யலாம் என்ற விபரம் தெரிகிறது."

வாய்ந்தவர்கள். கல்வி என்பது அதை வெளிக்காட்டுவதற்கும் மேலே கொண்டு வருவதற்கும் உதவியாக இருக்கும். நான் தமிழ்நாட்டுவாசிதான், சென்னை மயிலாப்பூரில் படித்த சென்னைவாழ் மக்கள்தான். சென்னையில் அதாவது தமிழ்நாட்டில் கல்விக்கு ஒரு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அந்தக் கல்வி பெண்களைச் சென்றடையும்போது விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

இங்கு என்ன நடக்கிறது நம்மைச் சுற்றி, நாம் என்ன செய்யலாம், ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வி அறிவு வளர வளர குடும்பத்தை எப்படி நன்றாக நகர்த்திச் செல்வது, குடும்பத்தை எப்படி மேல்கொண்டுவருவது,என்னுடையகுழந்தைகள்மகளோமகனோ என்னை போல் இருக்கக் கூடாது, என் கணவரைப் போல் இருக்கக் கூடாது, இன்னும் நன்றாகப் படிக்க வேண்டும், நல்ல வேலைக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறார்கள்.

இதனால் கல்வி பெண்களுக்கு அதிக விழிப்புணர்வை கொடுக்கிறது. தமிழ்நாடு அரசு மகளிருக்கு ஈடுபாட்டுடன் கல்வியைக் கொடுப்பதால் பெண்களின் மேம்பாட்டிற்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

வங்கித் தொடர்பாளர்களில் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் கூட இருக்கிறார்கள் என்கிற போது அவர்களுக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது, நாம் என்ன செய்யலாம் என்ற விபரம் தெரிகிறது. எந்த வேலையாக இருந்தாலும் சரி, அது மாடு வளர்ப்பாகவோ அல்லது நெசவுத் தொழிலாகவே இருந்தாலும் அதில் ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள்.

இத எல்லாவற்றிற்கும் கல்விதான் முக்கியமாக இருக்கிறது. தமிழ்நாடு அரசு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கு கல்வி அறிவு வர வர கடன் வாங்கினால் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணமும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தினால் மீண்டும் கடன் நமக்குக் கிடைக்கலாம் என்ற விபரங்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. தமிழ்நாட்டில் பெண்கள் மேன்மை அடைந்திருக்கிறார்கள் என்பது இது பாரதம் போற்றும்ஒன்றாக உள்ளது.

மகேஸ்வரி: நாட்டில் நிறைய வங்கிகள் செயல்படுகின்ற நிலையில், மகளிருக்கு என்று தனியாக ஒரு வங்கி துவக்கப்படுவதற்கான அவசியம் என்ன?

நாட்டில்சுமார் 1,10,000 வங்கிக்கிளைகளை ஒவ்வொரு வங்கியும் கொண்டுள்ளது. மகளிர் வங்கி அவசியமா? என்ற ஒரு கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. பத்திரிக்கையாளர் கூட்டங்களில் என்னிடம் கேட்கப்படும் முதல் கேள்வியும் இதுதான். ஒன்றை பார்த்தீர்கள் என்றால், பெண்களுக்கு வங்கிச் சேவை என்பது, பணம் சேர்க்கிறார்கள், கடனும் வாங்குகிறார்கள். தாங்கள் செய்வது பேங்கிங் என்பது தெரியாமலேயே ,இருக்கிறார்கள். பத்து ரூபாய் கிடைத்தால் அதை ஒரு பெண்ணிடமே அல்லது ஆணிடமோ கொடுத்துப் பாருங்கள்... என்ன நடக்கும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அது எங்கு போகும் என்று உங்களுக்கேத் தெரியும். 10 ரூபாய் ஒரு அம்மாவிடம் கிடைத்தால் பையனுக்கு புத்தகம் வாங்கித் தரலாம் தன் பெண்ணிற்கு ஏதாவது வாங்கித் தரலாம் என்று நினைப்பார்கள். அதற்காக சிறுகச் சிறுகப் பணத்தை சேமிக்கிறார்கள். ஆனால் இந்தப் பணத்தை வங்கியில் சேமித்தால் அதற்கு வட்டி கிடைக்கும்,தான் சேமிக்கும் பணம் அதிகமாகலாம் என்பது அந்தப் பெண்ணிற்கு தெரிவதில்லை. பெண்கள் சேமிக்கிறார்கள். ஆனால் அந்த சேமிப்பை வங்கி வரை கொண்டு செல்லத் தெரியவில்லை. ■

(சேமிப்பு தொடரும்)

“மகளிர் வங்கி அவசியமா? என்ற ஒரு கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. பத்திரிக்கையாளர் கூட்டங்களில் என்னிடம் கேட்கப்படும் முதல் கேள்வியும் இதுதான்.”

நம் மாவட்டம்

தேனி

குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 10.09.2014 அன்று மாவட்ட ஆட்சியர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்களிடமிருந்து பெறப்பட்ட 210 மனுக்களில், தகுதி வாய்ந்த மனுக்களின் மேல் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார். இக்கூட்டத்தில் மகளிர் திட்ட அலுவலர் திருமதி. உஷாதேவி, தனித்துணை ஆட்சியர் திருமதி. சாந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர்

கல்லூரிச் சந்தை

திருவள்ளூர் மாவட்டம் பாண்டூர் இந்திரா இன்ஸ்டியூட் ஆப் இன்ஜினியரிங் அண்டு டெக்னாலஜி கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை, மாவட்ட திட்ட இயக்குநர் திரு. சி. கே. வீரணன் அவர்கள் துவக்கி வைத்தார். 08.09.2014 முதல் 09.09.2014 வரை நடைபெற்ற இக்கல்லூரிச் சந்தையில் 27 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். பேராசிரியர்கள், மாணவ மாணவியர் இச்சந்தைக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

நாமக்கல்

கூட்டமைப்புகளுக்கு ஊக்க நிதி

நாமக்கல் மாவட்டத்தில் தர மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 31 ஊராட்சிகளுக்கு ஊக்க நிதியாக தலா ரூ. ஒரு இலட்சம் வீதம் ரூ. 31 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு தோப்பு வெங்கடாசலம் அவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளிடம் ஊக்க நிதிக்கான காசோலைகளை வழங்கினர். இந்த ஊக்க நிதி யானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் அவைகளில் உறுப்பினராக உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உள்கடனாக வழங்கவும், அடிப்படை செலவினங்களை மேற் கொள்ளவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார். ■

பெரம்பலூர்

ஓட்டுனர் உரிமம் வழங்குதல்

பெரம்பலூர் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஓட்டுனர் பயிற்சி பெற்ற 3 பெண்கள் மற்றும் 11 ஆண்களுக்கு ஓட்டுநர் உரிமங்களை, 08.09.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஷ் அஹமது, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் ஓட்டுனர் உரிமங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் (பொ) திரு. அ. அய்யம்பெருமாள், உதவித் திட்ட அலுவலர்கள், கண்காணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவண்ணாமலை கல்லூரிச் சந்தைகள்

மகளிர் சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகளில் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், இதயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, லயோலா கலை கல்லூரி, சன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் கல்லூரிச் சந்தைகள் நடைபெற்றன. இக்கல்லூரிச் சந்தைகளில் பெருமளவில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான பொருட்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். இக்கல்லூரிச் சந்தைகளை திருவண்ணாமலை மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் (பொ) திரு. எஸ். எஸ். தனபதி அவர்கள் துவக்கி வைத்தார். உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

இராமநாதபுரம்

பாரம்பரிய உணவகம்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதியின்படி பாரம்பரிய உணவகம் திறக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி அன்பு மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாரம்பரிய உணவகத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட திட்ட இயக்குநர் (பொ) ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தனர். ■

விழுப்புரம்

கல்லூரிச் சந்தைகள்

விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சின்னசேலம் இதயா மகளிர் பொறியியல் கல்லூரி, ஓலக்கூர் பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி மற்றும் மயிலம் பவ்டா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தைகள் நடைபெற்றன. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. வா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குனர் / திட்ட அலுவலர் திரு. ஜி. இராதா, உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள், கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டு சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டனர். கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவ மாணவியர்கள் ஆர்வத்துடன் கல்லூரிச் சந்தைகளுக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ■

கரூர்

வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருது

கரூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் மூலம் 2011-2012 மற்றும் 2012-2013ஆம் ஆண்டுகளில் சுழல் நிதி மற்றும் நேரடிக் கடன் வழங்குதல், தாட்கோ மற்றும் அரசுத் திட்டங்களின் மூலம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு கடன்கள் வழங்குதல் போன்ற திட்ட செயல்களில் அதிக அளவு கடன் இணைப்பு வழங்கி சாதனை படைத்த வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருது மற்றும் சான்றிதழ்களை கரூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ச. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் 09.09.2014 அன்று நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

கரூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குளித்தலை மற்றும் பள்ளப்பட்டி இந்தியன் வங்கிக் கிளைகள், தாந்தோணி கிளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவை சிறந்த வங்கி மற்றும் வங்கிக் கிளைகளுக்கான விருதினைப் பெற்றன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள், வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளின் அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர், கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதி மற்றும் நேரடிக் கடன் போன்றவைகளை வழங்கி வரும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை சிறப்பிக்கும் வகையில் வங்கிகளுக்கும், வங்கிக் கிளைகளுக்கும் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

நம் மாவட்டம்

சென்னை

சிறந்த வங்கிக் கிளைகளுக்கு பரிசு

சென்னை மாநகராட்சியில் 15.08.2014 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியின் போது, சுய உதவிக் குழுவினருக்கு கடன் இணைப்பு வழங்கிய சேத்துப்பட்டு கிளை இந்தியன் வங்கி – மைக்ரோசாட் 1 மற்றும் திருவான்மியூர் கிளை இந்தியன் வங்கி – மைக்ரோசாட் 2 ஆகியவைகளுக்கு வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு சைதை துரைசாமி அவர்கள் பரிசுகளை வழங்கினார். மேலும் மகளிர் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க சிறப்பாக செயல்பட்ட சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி), வழிகாட்டும் மாவட்ட திட்ட மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் மேற்படி விழாவில் வழங்கப்பட்டன.

சேலம்

திட்ட அறிமுகப் பயிற்சி

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து ஒருநாள் வட்டார அளவிலான திட்ட அறிமுகப் பயிற்சி (Block Level Orientation Training) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், வட்டார அளவிலான அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுநர்களைக் கொண்டு காடையாம்பட்டி, நங்கவள்ளி, எடப்பாடி, கொளத்தூர், சேலம், மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய ஏழு வட்டாரங்களிலும் 26.08.2014, 27.08.2014 மற்றும் 28.08.2014 ஆகிய தேதிகளில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களின் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. ■

சென்னை கருத்துப் பட்டறை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக தயாரிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்பாளர் கையேட்டினை அடிப்படையாகக் கொண்டு, பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முதல் கட்டமாக 8 மாவட்டங்களில் உள்ள உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட அளவிலான முதுநிலை பயிற்சியாளர்கள் மற்றும் வட்டார மாற்றுத் திறனாளிகள் தணிக்கும் மற்றும் மறுவாழ்வு நிறுவனத்தின் முதுநிலை பயிற்சியாளர்களுக்கு 18.08.2014 முதல் 23.08.2014 வரை நடைபெற்றது. இந்தப் பயிற்சியினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர் திரு எல். ராஜா அவர்கள் துவக்கி வைத்தார். இப்பயிற்சி வகுப்பில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் மற்றும் டாக்டர்கள் கலந்து கொண்டு பயிற்சியினை அளித்தனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான ஆலோசகர் திருமதி. வி. தீபா ராஜ்கமல் மேற்பார்வையில் 5 நாட்கள் வகுப்பறை பயிற்சியும், ஒருநாள் களப்பயண ஆய்வு NIPMED முட்டுக்காட்டில் நடைபெற்றன. ■

திருச்சி

அடிப்படை தகவல் சேகரிப்பு பயிற்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இலால்குடி, புள்ளம்பாடி, திருவெறும்பூர், உப்பிலியாபுரம் மற்றும் வையம்பட்டி ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 134 ஊராட்சிகளில் அடிப்படை தகவல் சேகரிப்புப் பயிற்சி நடத்தப்பட்டது. மேற்படி அடிப்படை தகவல் சேகரிப்பு பயிற்சியில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், தொகுப்பிற்கு 4 சமுதாய வளப் பயிற்றுனர்கள் மற்றும் ஊராட்சி வாரியாக உறுதுணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியானது சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மூலம் மேற்படி நபர்களுக்கு அளிக்கப்பட்டது. தற்போது மேற்கண்ட 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் அடிப்படை தகவல் சேகரிப்பு பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. ■

கிருஷ்ணகிரி

கல்லூரிச் சந்தை

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசினர் பொறியியல் கல்லூரியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 03.09.2014 முதல் 05.09.2014 வரை நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை மாவட்ட திட்ட இயக்குனர் திரு. ஜி. இராமையா அவர்கள் துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். 18 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இக்கல்லூரிச் சந்தையில் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். ■

திருப்பூர்

வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் ஆய்வு

திருப்பூர் மாவட்டத்திற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய 13.08.2014 மற்றும் 14.08.2014 ஆகிய தேதிகளில் வருகை தந்த கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. எல். ராஜா அவர்கள், அலுவலக ஆய்வு மற்றும் திட்ட முன்னேற்றம் தொடர்பாக திட்ட இயக்குநர் (பொ) மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுடனும், திருப்பூர் மாவட்ட அனைத்து வட்டார திட்ட மேலாளர்கள், பகுதிப் பணியாளர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்க பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் இளைஞர் திறன் பயிற்சி பெறுவோருடன் கலந்துரையாடினார். ■

கடலூர் நிதி வழங்கும் விழா

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மக்கள் குறை தீர்க்கும் கூடத்தில் 24.08.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 100 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ரூ. 3.50 இலட்சம் வீதம் ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் நிதியும் மற்றும் 14 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு துவக்க நிதியாக தலா ரூ. 50 ஆயிரம் வீதம் ஏழு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் மற்றும் இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தின் மூலம் ஓட்டுநர் தொழிற் பயிற்சி பெற்ற 60 நபர்களுக்கு ஓட்டுநர் உரிமங்களையும் வழங்கினார்கள். இவ்விழாவில் மகளிர் திட்ட இயக்குநர் (பொ) திரு. இராஜ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கவிதை

முற்றம் பெண்ணுக்கு சமர்ப்பணம்!

முற்றம் மாத இதழே!
தமிழுக்கு தலைவணங்கும் நீயும்
என்னைப் போன்ற பெண்ணவளே!
மங்கையரின் முன்னேற்றத்தை
மங்கலமாய் வெளிப்படுத்தும் நீ
மங்கையர் திலகம்தான் நிச்சயமாய்!
உன் மாதாந்திர வருகைக்கு
என் வீட்டு முற்றம் மட்டுமல்ல
ஏராள வீட்டு முற்றங்களும்
காத்திருக்கே!
பட்டுப் போன்ற மென்தமிழில் நீ
அள்ளித் தரும் அனைத்து
தகவல்களும்
படிக்கப் படிக்க பேரானந்தமே!
உன் தகவல் களஞ்சியத்திலும்
முற்றக் கச்சேரியிலும் உன்
பெருமையை
எண்ணி எண்ணி அதிசயிக்கிறேனடி!
புதுவாழ்வு திட்டப் பெண்களின்
வாழ்வாதாரத்தையும், திறமையையும்
வெளிப்படுத்தும் நீ ஒரு புதையல்
பெட்டகம்!
சுனாமிக்குப் பிந்தைய
வாழ்வாதாரத்தையும்
பலரும் பலனடைய விளக்கும் நீ
மகளிரின் கலங்கரை விளக்கு!
மாற்றுக் கருத்து ஏதுமில்லையடி
பெண்ணே
மாற்றுத் திறனாளிக்கும் சொக்கத்
தங்க தோழியடி!
வாழ்க நீ பல்லாண்டு!
வளர்க நீ பல நூறாண்டு!!

பி. பானுப்ரியா,
Junior Specialist,
புதுவாழ்வு திட்ட மாநில
அலுவலகம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

நாகை மாவட்ட 'மா' உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்

"தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், சுனாமியால் அதிகமாக பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது."

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், சுனாமியால் அதிகமாக பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் பல்வேறு வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, The Covenant Centre for Development (CCD), மதுரை என்ற நிறுவனத்தின் உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்ட கடலோர பகுதிகளில் உள்ள 'மா' விவசாயிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

மூன்று கடலோர ஊராட்சிகளில் வாழும் 887 'மா' விவசாயிகளுடன் 51 முதன்மைக் குழுக்கள் புதிய வங்கிக் கணக்குகளுடன் ஏற்படுத்தப்பட்டு, அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, 'திருமறைக்காடு கடலோர விவசாயிகள் டிரஸ்ட் (TKVT)' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மா விவசாயிகளின் சங்கங்கள் சிறந்த இலாபம் ஈட்டி, பெரும் வெற்றி பெற்றுள்ளதால், மேலும் ஐந்து ஊராட்சிகளில் புதிய 50 மா உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கவும், இடுபொருட்களின் அங்காடிகள் அமைத்திடவும், மூன்று ஆண்டுகள் கால நீட்டிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை CCD நிறுவனத்தைச் சேர்ந்த திரு. முத்து வேலாயுதம், முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர் மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மா விவசாயிகளிடம் இத்திட்டத்தால் அவர்களுக்குக் கிடைத்த அதிகப்படியான மகசூல் மற்றும் இலாபம் குறித்து முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர் அவர்கள் விரிவாகக் கேட்டறிந்து, மா விவசாயிகள் இத்திட்டத்தின் முழுப் பயனையும் அடையத் தேவையான பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

காப்பீட்டு திட்டத்தில் இணைந்ததால் காப்பாற்றப்பட்டேன்...!

> "என்னைப் போன்ற ஏழை மக்களுக்கு இந்தத் திட்டம் பெரும் பயன் அளிப்பதாக உள்ளது. காப்பீடுத் திட்டம் இல்லையெனில் பெரும் இன்னலுக்கு ஆளாகியிருப்பேன்.'"

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிப்பது காப்பீட்டுத் திட்டம். இதில் குறைந்த பிரீமியம் செலுத்தி அதிக பயன்பெறும் வகையில் பல காப்பீட்டுத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1,89,698 பேர் இக்காப்பீட்டுத் திட்டங்களில் இணைந்துள்ளனர். 1512 பேருக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், வாண்டியாம்பள்ளம் கிராமத்தில் வசிக்கும் ராஜலட்சுமி, காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் தான் பெற்ற அனுபவத்தை கூறுகையில்:–

'நான் ராஜகணபதி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகவும் உள்ளேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் காப்பீடு சம்மந்தப்பட்ட விழிப்புணர்வு பயிற்சியில் கலந்து கொண்டு காப்பீட்டின் பயனை அறிந்து மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் என் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்து ஆண்டு பிரீமிய மாக ரூ. 150/– மட்டுமே செலுத்தி வந்தோம். எதிர்பாராத வித மாக கடந்த 20.02.2014 அன்று என் கணவருக்கு கடுமை யான வயிற்றுவலி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரை 23.02.2014ஆம் தேதி அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்ததில் சிறுநீரகத்தில் கல் இருப்பதை அறிந்து உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும், அதற்கு ரூ. 10,000/– வரை செலவாகும் மருத்துவர்கள் கூறினர். உடனே எங்கள் கிராமத்தில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் காப்பீட்டுத் தோழியிடம் தகவலை தெரிவித்த பின் என் கணவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சைக்குப் பின் ரூபாய் 9,300/–ஐ எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்றுத் தந்தது. என் கணவர் தற்போது குணமடைந்து நல்ல முறையில் உள்ளார். என்னைப் போன்ற ஏழை மக்களுக்கு இந்தத் திட்டம் பெரும் பயன் அளிப்பதாக உள்ளது' என்றார்.■

செயற்கை பவளப் பாறைகள் மேலும் பன்னிரண்டு இடங்களில் அமைத்திட ஏற்பாடு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பாகுதிகளில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் கடந்த ஆண்டு ரூ. 79 இலட்சம் செலவில் மத்திய கடல்சார் ஆராய்ச்சி மையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் செயற்கை பவளப் பாறைகள் தயார் செய்து நிறுவப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 6வது கூட்டு ஆய்வுக் குழுவின் பரிந்துரையை ஏற்று ஒரு மாவட்டத்திற்கு இரு இடங்கள் என்ற அளவில், புதிதாக 12 இடங்களில் செயற்கைப் பவளப் பாறைகள் நிறுவுவதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மத்திய கடல்சார் ஆராய்ச்சி மையம், செயற்கை பவளப் பாறைகள் அமைக்கும் இடங்களைத் தேர்வு செய்து வருகிறது. இப்பணிகள் முடிவுற்றதும் செயற்கை பவளப்பாறைகள் தயாரித்து, அவற்றை கடலில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் திறந்தவெளி ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப்படும்.■

அரையாண்டு திட்டமிடல் குறித்த கருத்துப் பட்டறை

சுனாமியால் பாதிப்புக்குள்ளான தமிழகக் கடற்கரை மாவட்டங்களைச் சேர்ந்த 109 கடலோர கிராம ஊராட்சிகளில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவில் மக்களின் பிரச்சனைகள். கருத்துகள் குறித்த ஆலோசனைகளைப் பெறுவதற்கு ஆண்டுக்கு இருமுறை அரையாண்டு திட்டமிடல் குறித்த கருத்துப் பட்டறை ஊராட்சி அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த கருத்துப் பட்டறைக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், புத்தகப் பராமரிப்பாளர்கள், காப்பீட்டு தோழி, குறுந்தொழில் பயனாளிகள் மற்றும் மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

இது மட்டுமின்றி இத்திட்டத்தின் பங்காளர்களாகிய FNGO, வங்கியாளர்கள், காப்பீட்டு நிறுவன மேலாளர்கள், மருத்துவமனைகளின் பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மீன் வளத்துறையினர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரும் அழைக்கப்படுகிறார்கள்.

இந்த அரையாண்டுத் திட்டமிடலின் மூலம் ஊராட்சிகளில் கடந்த ஆறு மாத காலத்தில் நடந்து முடிந்த திட்ட செயல்பாடுகளை விளக்கி கூறியும், அடுத்த ஆறு மாத காலத்திற்கு தேவையான திட்டங்களை பெற்று தொகுத்து திட்ட அலகிற்கு அனுப்பவும் வழி வகை செய்யப்படுகிறது.

இந்த அரையாண்டுத் திட்டமியிடல் கருத்துப் பட்டறையில் கலந்து கொள்வோர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், பிரச்சனைகள் ஆகியவை பற்றி இந்தக் கருத்துப் பட்டறையில் கலந்தாய்வு மேற்கொள்ளப்படுகின்றன.

பயனாளிகள் கோரும் தொழில் திட்டங்கள் குறித்த விபரங்களும் இதில் ஆராயப்படும். இந்தக் கருத்துப் பட்டறைகளில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் மாவட்ட செயலாக்க அலுவலரால் ஊராட்சி வாரியாக ஆவணப்படுத்தப்பட்டு தக்க மேல் நடவடிக்கைக்காக சென்னையில் உள்ள சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட மேலாண்மை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

விழுப்புரம் மாவட்டம், பொம்மையார்பாளையம் ஊராட்சியில் 02.09.2014 அன்று நடைபெற்ற அரையாண்டு திட்டமிடல் குறித்த கருத்துப் பட்டறையில் கலந்து கொண்ட திட்டமிடல் குழு உறுப்பினர்கள் தங்களின் தேவைகள் மற்றும் மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் குறித்த பல்வேறு விபரங்களையும், தக்க ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

ஊராட்சி அளவில் மக்களின் பிரச்சனைகள், கருத்துக்கள்,திட்ட செயல்பாடுகள் குறித்த பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும் இந்தத் திட்டமிடல் கருத்துப் பட்டறைகள் உண்மையான மக்களாட்சித் தத்துவத்தை எடுத்தியம்புகின்றன. அதுமட்டுமல்லாது திட்டமிடலில் பொது மக்களின் பங்கேற்பை உறுதி செய்வதையும் இத்திட்டக்கூறு உறுதிப்படுத்துகின்றது. ■

> “ஊராட்சி அளவில் மக்களின் பிரச்சனைகள், கருத்துக்கள், ஆலோசனைகள் பெறுவதற்கு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும் திட்டமிடல் கருத்துப் பட்டறைகள் உண்மையான மக்களாட்சித் தத்துவத்தை எடுத்தியம்புகின்றன. அதுமட்டுமல்லாது திட்டமிடலில் பொது மக்களின் பங்கேற்பை உறுதி செய்வதையும் இத்திட்டக்கூறு உறுதிப் படுத்துகின்றது.”

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் ஏல விற்பனை மையமும் - அதன் பயன்பாடும்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர பகுதி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீனவ மக்களின் தேவைக்கேற்ப பல அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தரப்பட்டன. தங்கள் பகுதிகளில் மீன் ஏல விற்பனைக் கூடங்கள் அமைத்துத் தர வேண்டம் என்பது மீனவர்களின் நீண்ட நாளைய கோரிக்கை ஆகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தாங்கள் கடலில் பிடித்து வரும் மீன்களை எவ்வித பாதுகாப்புமின்றி கடற்கரை மணலில் கொட்டி ஏலம் விட்டு விற்பனை செய்து வந்தனர். இவ்வாறு செய்வதால் மணலில் உள்ள மாசுக்கள் மீன்களின் மேல் படிந்து, அவற்றின் தரம் கெட்டு மிக குறைந்த விலைக்கு விற்கும் அவலம் ஏற்பட்டு வந்தது. இந்நிலையை மாற்ற ஏதேனும் உதவி செய்யும்படி அப்பகுதி மீனவர்கள் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினிடம் கேட்டுக் கொண்டனர்.

அம்மீனவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்துறை கிராமத்தில் ரூபாய் 44,77,000/– மதிப்பீட்டில் 2866 சதுர அடி பரப்பளவில் மீன்கள் சுத்தம் செய்யும் அறை, மீன்களைப் பதப்படுத்தும் அறை, மீன்கள் ஏலம் விடும் அறை, அலுவலக அறை மற்றும் 24 மணி நேர தண்ணீர் வசதி ஆகியவற்றுடன் கூடிய மீன்கள் ஏல விற்பனைக் கூடம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் தாங்கள் பிடித்து வரும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு விற்பனை செய்து கூடுதல் விலை கிடைக்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

ஒரே நாளில் விற்பனையாகாத மீன்களை 2 முதல் 4 நாட்கள் வரை பதப்படுத்தி விற்பனை செய்ய குளிரூட்டும் அறை வசதி உள்ளமையால், மீனவர்கள் நஷ்டமடைவது பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது.

இதைப் போன்ற 4 மீன் ஏல விற்பனைக் கூடங்கள் நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 150 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் அப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கும் ஈடுதல் இலாபம் கிடைக்க விரைவில் வழி ஏற்படுத்தப்படும். ■

> “மீனவர்கள் தாங்கள் பிழத்து வரும் மீன்களை சுகாதார மான முறையில் கையாண்டு விற்பனை செய்து கூடுதல் விலை கிடைக்க வழிவகைச் செய்யப் பட்டுள்ளது. ஒரே நாளில் விற்பனையாகாத மீன்களை 2 முதல் 4 நாட்கள் வரை பதப்படுத்தி விற்பனை செய்ய குளிரூட்டும் அறை வசதி உள்ளமையால், மீனவர்கள் நஷ்டமடைவது பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளது”

உங்க ஏரியா...

■ புள்ளிகளை இணைக்கவும்



■ விளக்கை அடைய வழி கண்டுபிடியுங்கள்



■ இரண்டு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்

> இந்நிகழ்வின் போது சேலம் மாவட்ட மகமையின் மூலம் இதுவரை மேற் கொண்டுள்ள செயல்பாடுகள் மற்றும் நிதி நிலை விபரங்கள் குறித்து மாவட்ட மகமை உறுப்பினர்களுடன் உலக வங்கியின் பிரதிநிதி கலந்துரையாடினார்.

உலக வங்கி பிரதிநிதி ஆய்வு

சேலம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் செயல்படும் மாவட்ட மகமையின் செயல்பாடுகளை 09.09.2014 அன்று உலக வங்கியின் பிரதிநிதி திரு. சமிக்தாஸ் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஷஜீவனா ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்நிகழ்வின் போது சேலம் மாவட்ட மகமை மூலமாக இதுவரை மேற்கொண்டுள்ள செயல்பாடுகள் மற்றும் நிதி நிலை விபரங்கள் குறித்து மாவட்ட மகமை உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது. மேலும் திரு. சமிக்தாஸ் அவர்கள், மகமை சிறப்பாக செயல்பட ஆலோசனை வழங்கினார். மேலும் மாவட்ட மகமைக்கு நிறுவன வளர்ச்சி நிதி விடுவிப்பு தொடர்பான உத்தரவினை அனைவரது முன்னிலையில் மாவட்ட மகமை நிர்வாகிகளிடம் வழங்கினார். பின்னர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் கண்காட்சியினையும் உலக வங்கி பிரதி நிதி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. க. மூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள், வேளாண் ஆலோசகர், திட்ட பணியாளர்கள் மற்றும் மாவட்ட மகமை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

இளைஞர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி

தமிழகத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் உள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சியும், வேலை வாய்ப்பும் இளைஞர்களுக்கு ஏற்படுத்தி, அவர்களுடைய குடும்ப வருமானத்தை உயர்த்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது. மதுவினால்ஏற்படும்தீமைகள்,புகைப்பிடித்தல்,எச்.ஐ.வி. – எய்ட்ஸ், பாலியல் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை இளைஞர் தூதுவர்களுக்கு (Youth Ambassador) ஏற்படுத்தி, அவர்களின் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள இளைஞர்கள் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த வழிவகை செய்யப்படும்.

மேற்படி விழிப்புணர்வு பயிற்சி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து களப்பகுதிகளிலும் 11.08.2014 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் கலந்து கொண்டு, புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டு வரும் திறன் வளர்ப்பு பயிற்சி குறித்து விளக்கி கூறியதுடன் இளைஞர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

வேலூர்

கல்லூரிச் சந்தை மற்றும் கருத்தரங்கம்

வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் 12.08.2014 அன்று மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம் மற்றும் வி.ஐ.டி. பல்கலைக் கழகம் இணைந்து நடத்திய கல்லூரிச் சந்தையினை, வி.ஐ.டி.யின் துணை தலைவர்கள் திரு. சேகர் விசுவநாதன், திரு. ஜி. வி. செல்வம், புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குனர் திருமதி ஆர். வி. ஷஜீவனா, மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் (பொ) திரு. வை. ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் திரு. கே. வி. ராவ் திறந்து வைத்தார். கல்லூரிச் சந்தை நடைபெற்ற மூன்று நாட்களும் ஏராளமான பேராசிரியர்கள் மாணவ மாணவியர் கல்லூரிச் சந்தைக்கு வருகை தந்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ■

> வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் முதுகலை மேலாண்மை படிக்கும் மாணவர்களிடையே சுய உதவிக் குழுக்கள் தொடர்பான அறிமுகம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் 'சுய உதவிக் குழுக்களுக்கான உற்பத்தி மற்றும் பொருட்கள் சந்தைப்படுத்துவதில் உள்ள வாய்ப்புகள்' குறித்த கருத்தரங்கம் வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் உள்ள காமராஜ் அரங்கத்தில் நடைபெற்றது.

திருவள்ளூர்

தொழில் குழுக்களின் செயல்பாடுகள்

திருவள்ளூர் மாவட்டம், கச்சூர் கிராமத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் ஒத்தத் தொழில் குழுக்களாக இணைந்து சாமந்திப் பூ சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றன. மாநில புதுவாழ்வு திட்ட நுண்நிதி வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், மேற்படி தொழில் குழுக்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு, மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். ■

புதுக்கோட்டை

புதுவாழ்வு அரங்கிற்கு பரிசு

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் கடந்த 20.07.2014 முதல் 26.07.2014 வரை பாரம்பரிய உணவுத் திருவிழா நடைபெற்றது. இதில் புதுவாழ்வு திட்டம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பாரம்பரிய உணவுகள் விற்பனை அரங்கு சிறந்த அரங்காக தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும் முதல் பரிசு மற்றும் கேடயத்தினை வழங்கினர். ■

கோவை

கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம்

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் களப்பகுதி, இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சியில் புதுவாழ்வு திட்டம், TANUVAS மற்றும் வட்டார மகமை பங்களிப்புடன் கால்நடைகளுக்கு கோலிபார்ம் மடி நோய் தடுப்பூசி முகாம் முதல்கட்டமாக 04.06.2014 அன்று நடைபெற்றது. இதில் இக்கரை போளுவம்பட்டி, ஏழுவாய்க்கால்மேடு ஆகிய பகுதிகளில் உள்ள 65 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதுடன், 38 மாடு களின் இரத்த மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. 04.07.2014 அன்று நடைபெற்ற முகாமில் 35 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதுடன், 24 மாடுகளின் இரத்த மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. இம்முகாமில் சென்னை, தஞ்சை, கோவை மாவட்டங்களில் செயல்படும் TANUVAS கால்நடை மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். ■

> “மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு வந்து மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களிடம் திட்ட நிர்வாகம் குறித்து பல்வேறு விபரங்களையும் கேட்டறிந்தனர். இறுதியாக இக்குழுவினர் சாத்தூர் ஒன்றியம் இருக்கன்குழி கிராம வறுமை ஒழிப்புச் சங்க செயல்பாடுகளையும் பார்வையிட்டனர்.”

விருதுநகர்

உலக வங்கி குழுவினர் ஆய்வு

உலக வங்கியின் பிரதிநிதி திருமதி. ஆஷா பகத், புதுவாழ்வு திட்ட மாநில நிதி வல்லுநர் திரு. மாணிக்கம், மேலாண்மை தகவல் வல்லுநர் (1) திரு. சிவலிங்கம் மற்றும் மேலாண்மை தகவல் வல்லுநர் (2) திரு. சதீஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். முதலாவதாக இக்குழுவினர் வத்திராயிருப்பு ஒன்றியத்திற்குட்பட்ட மாத்தூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்ததுடன், சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் பயன்பாட்டு விபரங்கள், சமூக தணிக்கைக் குழு, ஒத்த தொழில் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்த விபரங்களை தெளிவாகக் கேட்டறிந்தனர். அதைத் தொடர்ந்து கோட்டையூர் திட்ட ஒருங்கிணைப்பு அணி அலுவலகத்திற்குச் சென்று திட்ட பணியாளர்களிடம் பணிகள் குறித்து கேட்டறிந்தனர். மேலும் மாவட்ட திட்ட மேலார் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களிடம் திட்ட நிர்வாகம் குறித்து பல்வேறு விபரங்களையும் கேட்டறிந்தனர். ■

விழுப்புரம்

மன நல மருத்துவ முகாம்

விழுப்பும் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட, உலக வங்கி வல்லுனர் திருமதி. வரலட்சுமி, புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஷஜீவனா, மாநில வல்லுநர்கள் திரு. பெஞ்சமின், திரு. பிரகாஷ் ஆகியோர் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்தனர். இக்குழுவினர் சிறுவந்தாடு ஊராட்சியில் நடைபெற்ற மருத்துவ முகாம், மோட்சகுளம் ஊராட்சியில் நடைபெறும் பயிற்சிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். பின்னர் பஞ்சமாதேவி ஊராட்சி கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதுடன், அங்கு நடைபெற்ற கலைநிகழ்ச்சியினையும் கண்டு களித்தனர். இக்குழுவினருடன் விழுப்புரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. நித்தியானந்தம், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் உடனிருந்தனர். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை ‘முற்றம்’ என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

உலக வங்கி குழுவினர் வருகை

பெரம்பலூர் மாவட்டத்தில் புதுவாழ்வுத் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட 08.09.2014 அன்று பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த, மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., உலக வங்கியைச் சேர்ந்த திரு. கெவின் கிராக்போர்ட், திருமதி. இசபெல்லா லியோ, புதுவாழ்வு திட்ட மாநில வாழ்வாதார வல்லுநர் திரு. சக்கரபாணி ஆகியோருடன், பெரம்பலூர் மாவட்ட சார்ஆட்சியர் திரு. மதுசூதனன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டார்.

இக்குழுவினர் பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படும் Fine Fit ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தைப் பார்வையிட்டு அந்நிறுவனம் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தனர். புதுவாழ்வு திட்டத்தின் கீழ் செயல்படும் இளைஞர் திறன் வளர்ப்பு நிதியிலிருந்து ATDC பயிற்சி பெற்று, இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளவர்களுடன் கலந்துரையாடினர்.

பின்னர் உலக வங்கிக் குழுவினர் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்களை சந்தித்தனர். மாவட்ட ஆட்சியர் அவர்கள் புதுவாழ்வுத் திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கிராம கற்றல் மையத்தின் மின் ஆளுமை திட்டம் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இணை உணவுத்திட்டம், பகல் நேர பராமரிப்பு மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட ஆட்சியருடனான சந்திப்பிற்கு பிறகு உலக வங்கிக் குழுவினர், குன்னம் ஊராட்சியில் செயல்படும் IL & FS நிறுவனத்தில் வெல்டிங் பயிற்சி பெற்று குன்னம் IOB வங்கியில் புதுவாழ்வு திட்டத்தின் முயற்சியால் கடனுதவி பெற்று வெல்டிங் தொழில் செய்து வரும் செந்தில் குமார் என்பவரின் SMS தொழில் மையத்தையும், வேப்பூர் ஊராட்சி அரசு பள்ளியில் செயல்பட்டு வரும் பகல் நேர பராமரிப்பு மையத்தையும் பார்வையிட்டனர்.

மேலும் வடக்கலூர் ஊராட்சி காந்தி நகர் பகுதியை சேர்ந்த பழங்குடியினரால் நடத்தப்படும் மகாத்மா காந்தி பால் உற்பத்தியாளர்கள் பூச்சரத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் பூச்சரம் குறித்து கலந்துரையாடல் செய்தனர். அப்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 15 நபர்களுக்கு புதுவாழ்வு திட்ட முயற்சியால் கறவை மாடுகள் வழங்கப்பட்டதாகவும், தற்போது தினமும் ஆவின் நிறுவனத்திற்கு பூச்சரம் மூலம் 90 லிட்டர் பால் வழங்கப்படுவதாகவும் பூச்சரத்தின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். ■

> “ புதுவாழ்வு திட்டத்தின் கீழ் செயல்படும் இளைஞர் திறன் வளர்ப்பு நிதியிலிருந்து *ATDC* பயிற்சி பெற்று, இந்நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளவர்களுடன் கலந்துரையாடினர். ”

தன்னம்பிக்கைத் தந்த திட்டம்

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியம், ஏழாயிரம் பண்ணை ஊராட்சியில் வசித்து வரும் தங்கராஜ், மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். எதிர்பாராமல் நடந்த விபத்தில் தங்கராஜின் இடது கால் பாதிக்கப்பட்டு, அந்தக் கால் முழுவதும் ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்டது. இதனால் வேலைக்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமத்துடன்வாழ்ந்துவந்தார்.இந்நிலையில்இவரின் கிராமத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்பாட்டிற்கு வந்தது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் இடம் பெற்றிருந்த தங்கராஜிக்கு, செயற்கைக் கால் வழங்கப்பட்டது. தற்போது தனது பணிகளை தானே செய்து வரும் தங்கராஜ், சுய தொழில் மேற்கொள்ள தனி நபர் கடன் வேண்டி விண்ணப்பித்துள்ளார். நடக்க முடியாமல் சிரமப்பட்ட தனக்கு செயற்கைக் கால் வழங்கி, தன்னம்பிக்கை ஏற்படுத்தியுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் தங்கராஜ். ■

மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் இடம் பெற்றிருந்த தங்கராஜிக்கு, செயற்கைக் கால் வழங்கப்பட்டது. தற்போது தனது பணிகளை தானே செய்து வரும் தங்கராஜ், சுய தொழில் மேற்கொள்ள தனி நபர் கடன் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

தென்னையில் சாதிக்கும் மகளிர்

தென்னை ஓலைகளைக் கொண்டு பல்வேறு பொருட்களை தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் அன்னை தெரசா மகளிர் குழுவிற்கு மொத்த வருவாயாக மாதம் ரூ. 75,000/- வரை வருவாய் கிடைக்கிறது. வங்கியில் வாங்கிய கடன் தொகையினையும் மாதந்தோறும் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், பெரிய ஓலைக்குடிபட்டியில் அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் ஒரு ஏக்கர் தென்னந்தோப்பை குத்தகைக்கு எடுத்து, தென்னை ஓலையைக் கொண்டு விசிறி, தட்டி, கூரை போன்றவைகளை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 200/- வரை வருமானம் ஈட்டி வருகின்றனர்.

குழுவிற்குமொத்தவருவாயாகமாதம்ரூ.75,000/- வரை கிடைக்கிறது. பள்ளி செல்லாத குழந்தைகளை மீட்டு தங்கள் செலவில் படிக்க வைப்பது, குழு உறுப்பினர்களின் இல்ல நிகழ்வுகளில் பங்கேற்பது போன்ற செயல்பாடுகளிலும் இக்குழுவினர் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அத்துடன் பெண்களுக்கான அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பது போன்ற செயல்பாடுகளிலும் அன்னை தெரசா சுய உதவிக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். ■

குளக்கரை கெண்டை மீன் வளர்ப்பு

பண்டைக் காலம் தொட்டே குளம் அமைத்து மீன் வளர்க்கும் முறை நம் நாட்டில் இருந்து வருகிறது. அவை இயற்கைக் கழிவுகளாக மாட்டுச் சாணம் மற்றும் கோழி எச்சங்கள் பயன்படுத்தப்பட்டு, அதன் மூலம் வருடத்திற்கு ஒன்று முதல் மூன்று டன் மீன்கள் ஒரு ஹெக்டேர் நிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உணவு வழங்கும் முறை கணிசமான மீன் உற்பத்தியை அதிகரிக்கிறது. மேலும் உணவு மற்றும் உரம் இரண்டையும் சிறப்பாக கலந்து கொடுப்பதன் மூலம் ஹெக்டேருக்கு 4 முதல் 8 டன் உற்பத்தியைப் பெறலாம்.

மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 0.04–10 ஹெக்டேர் அகலம் மற்றும் 1–4 மீட்டர் ஆழம் கொண்ட குளங்கள் பயன்படுத்தப்பட்டு பல்வேறு விதமான உற்பத்தியைத் தருகின்றன. சிறிய ஆழமில்லாத குளங்கள் மீன் வளர்ச்சியைப் பாதிக்கும் இயற்கை சார்ந்த பிரச்சனைகளுக்கும், பெரிய ஆழமான குளங்கள் நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகளுக்கும் உள்ளாகின்றன. 0.04–1 ஹெக்டேர் அகலமும், 2–3 மீட்டர் ஆழமும் கொண்ட குளங்களே சிறந்த நிர்வாகத்திற்கு ஏற்புடையதாகும்.

கெண்டை மீன் வளர்ப்பின் நிர்வாக நடைமுறைகள் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் சூழ்ச்சிகள் அடங்கியுள்ளன. இவை பரந்த அளவில் முறையே முந்தைய இருப்பு, இருப்பு, பிந்தைய இருப்பு நடவடிக்கைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முன் இருப்பு ஏற்பாடுகள்

குளத்தை தயார்படுத்தும் முன் களை மீன்கள் மற்றும் பகை மீன்கள் அழிக்கப்பட்டு, இயற்கை உணவுகள் வளர்வதற்கு ஏற்பாடு செய்து அவை பிழைப்பதற்கும், நல்ல வளர்ச்சிக்கும் வித்திட்டு அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க உறுதி செய்ய வேண்டும்.

நீர் களைகளும் தேவையற்ற உயிரினங்களையும் அகற்றி, மண் மற்றும் தண்ணீரின் தரத்தை உயர்த்துவது இக்கட்டத்தின் முக்கிய நிர்வாக அம்சமாகும்.

சில முன் இருப்பு ஏற்பாட்டு நடவடிக்கைகள்

குளங்களைக் காய விடுதல்

நீர் வடித்தலின் அவசியம் : குளங்களில் மீன்களை அறுவடை செய்த பின்பு நீரை முழுமையாக வடித்து விட்டு, குளங்களின் அடிப்பகுதியில் வெடிப்புகள் உண்டாகும் அளவிற்கு, குளங்களை வெயிலில் நன்றாகக் காய விட வேண்டும்.

இதனால் குளங்களின் அடிப்பகுதியிலுள்ள அங்ககக் கழிவுகளும், சேற்றிலுள்ள நச்சுயிரினங்களும் அழிக்கப்படுவதோடு, அடிப்பகுதியிலுள்ள நச்சு வாயுக்களும் வெளியேறுகின்றன.

குளத்தை வடித்த நிலையில் கரிய நிறத்துடனும், துர்வாடையுடனும் காணப்படும் அடிப்பகுதி, காய்ந்த பிறகு அங்குள்ள நச்சுத்தன்மை குறைவதால், நிறம் மாறி துர்வாடையின்றி இருக்கும். குளங்களை வருடம் ஒருமுறை நன்கு காயவிடுவதால், குளங்களின் உற்பத்தித் திறனை சிறப்பாகப் பராமரிக்கலாம்.

உழவு செய்தல்

குளம் தயாரிப்பில் அடுத்த கட்டமாக, குளங்களை நன்றாக உழுதல் வேண்டும். சுமார் 10 முதல் 15 செ.மீ. ஆழம் வரை உழுவதால் அடிமட்ட மண் மேலே வருகிறது. இதனால் குளத் தரையின் கீழ் சேர்ந்துள்ள கழிவுகள் வெளிப்படுத்தப்பட்டு அவற்றில் உள்ள நச்சுயிரிகள் அழிக்கப்படுவதோடு, நச்சு வாயுக்களும் வெளியேறுகின்றன. எனவே குளங்களை வருடம் ஒருமுறை நன்கு காயவிட்டு உழவு செய்வதால், குளத்திலுள்ள மண்ணில் நல்ல காற்றோட்டம் ஏற்பட்டுத் தூய்மையடைகிறது. ■

(தொடரும்)

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (67,600 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

உணவு உண்பதற்கு முன்பும்,
மலம் கழித்த பிறகும்,
சரியான முறையில்
கைகளைக் கழுவுவது எப்படி ?

கைகளை நீரினால் ஈரமாக்கிக்
கொண்டு சோப்பைத் தடவவும்.

உள்ளங்கைகளை நன்கு
தேய்த்துவிட்டுக் கொள்ளவும்.



விரல்களை ஒன்றினுள் ஒன்றாக
செலுத்தி நன்கு தேய்க்கவும்.



ஒரு கை விரல் நுனிகளை இன்னொரு
உள்ளங்கையில் தேய்க்கவும்.



உங்கள் கைகளை
நீரினால் சுத்தமாக கழுவவும்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 23.09.2014

நிதி உதவி வழிவகைகள்...
திறக்கப்படும் புதிய பாதைகள்

- அணுகும் வசதி இல்லாதவர்களுக்கும் கிளையில்லாமலே வங்கி வசதி
- நடமாடும் வங்கிச் சேவை வசதி
- வங்கிச் சேவை மையங்கள்
- கைரேகை மூலம் செயல்படும் காசாளும் இயந்திரங்கள்
- சுயஉதவிக் குழுக்களுக்கான சிறப்பு நிதியுதவிக் கிளைகள்
- நிதிசார் கல்வி மற்றும் கடன் ஆலோசனை மையம் (FLCC)
- இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனம் (INDSETI)
- நுண் காப்பீட்டுத் திட்டம்

ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதையில்.... மலர்கின்ற புன்னகை...

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி